கார்த்திகை - மார்கழி

புதுமலர்: 16

இதழ்: 06

# அனல்

01.11.2019

அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்


ஆவியிலே **அனலாயிருங்கள்:**

கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்.

- ரோமர் 12:11 -


ஆசிரியர்:

போதகர் வே. மகாராஜா

## மற்றவர்களை தைரியப்படுத்தி தூக்கி நிறுத்துங்கள்


சீயோன் தேவாலயப் பிரசுரம் Zion Church Publication

# பொருளடக்கம்


01. அனலின் வாழ்த்து
02. அனலின் குரல்
03. கதையும் கற்றதும்
04. நற்செய்திப்பகுதி
05. வாலிபர் வளாகம்
06. பெண்கள் பக்கம்
07. சிறுவர் வட்டம்
08. அருட்பணியாளர் சரிதை
09. குறுக்கெழுத்துப்போட்டி - 94
10. அனலின் ஆன்மீக விருந்து
11. ஸவீனாவிற்கு சந்தோஷம்
12. வினா விடை - 96




## ஜெப வேண்டுதல்

வியாதியினாலும், வேதனையினாலும், குடும்ப பிரச்சினையினாலும் கலக்கமுற்று என்ன செய்வது என்று அறியாமல் திகைக்கும் தாயே, தந்தையே, சகோதரனே, சகோதரியே கலக்கம் வேண்டாம். உங்கள் பிரச்சினைகளையும் தேவைகளையும் எங்களுக்கு எழுதுங்கள். உங்களுக்காக ஜெபிப்போம்.


**எழுத வேண்டிய முகவரி:**

சீயோன் ஜெபக்குழு,
இல 29, 29/1,
இராமையாச் செட்டியார் ஒழுங்கை,
யாழ்ப்பாணம், இலங்கை.

**Zion Prayer Group,**
**No: 29, 29/1 Ramiah Chettiar Lane,**
**Jaffna, Sri Lanka.**

**மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:**

ஆசிரியர் "அனல்",
இல 29, 29/1, இராமையாச் செட்டியார் ஒழுங்கை
யாழ்ப்பாணம், இலங்கை.


**The Editor "Anal",**
**No: 29, 29/1 Ramiah Chettiar Lane,**
**Jaffna, Sri Lanka.**




*T.P.: 0094(0) 21-222 2707 e-mail: jazion@sltnet.lk*

திக்கற்றவர்களாய் போகும் உன் பிள்ளைகளை ஒப்புவி, நான் அவர்களை உயிரோடே காப்பாற்றுவேன். உன் விதவைகள் என்னை நம்புவார்களாக - எரேமியா 49:11 -

# அனலின் வாழ்த்துக்கள்



ஆசிரியர்
வே.மகாராஜா
சிரேஷ்ட உதவிப் போதகர்,
சீயோன் தேவாலயம்,
யாழ்ப்பாணம்.

தேவனுடைய ராஜ்ஜியத்தின் ஒரு பங்காய் "சிறுமைப்பட்டவர்களுக்கு சுவிசேஷம்" என்னும் உன்னத பணியுடன் பயணித்துக் கொண்டிருக்கும் சீயோன் தேவாலயம் அறுபதாவது ஆண்டு நிறைவைக் கண்டது தேவ கிருபையே. தம் ராஜ்ஜிய வேலையில் செயலாற்றும் தேவாதி தேவனுக்கு முதற்கண் நன்றிகள்.

தேவபணியின் மேண்மைக்காக தங்களை ஒப்புக் கொடுத்து தேவ திட்டத்தில் தேவ அழைப்பின் உண் மையில் அடிபதித்து அறுபது ஆண்டுகளாய் ஓடிய, ஓடிக் கொண்டிருக்கும் தேவ ஊழியர்களுக்கு அதன் பலனை தேவன் ஈந்தருள்வார்.

சீயோனில், தேவ பணி தொடர தொடர்ந்து தேவனுக் காக செயலாற்றி, கர்த்தருக்கென்று ஆத்துமாக்களை ஆதாயம் செய்து தேவனுடைய இதய ஏக்கத்தை நிறைவேற்ற தொடரட்டும் தேவபணி.

இந் நன்நாளில் தொடர்ந்து தேவபணியில் ஓடும் மேற்பார்வை போதகர், தலைமைப் போதகர், ஆளுனர் குழு மற்றும் போதகர்கள், சுவிசேஷ ஊழியர்கள், சிறுவர் ஓய்வுநாள் பாடசாலை ஆசிரியர்கள், பெண்கள் ஊழியம் செய்பவர்கள், காரியாலய உத்தியோகத்தார்கள் அத்துடன் தேவனுடைய பணியை எவ்விதத்திலாவது செய்யும் ஒவ்வொருவருக்கும் நன்றிகள். அத்துடன் கர்த்தருக் காய் பணிசெய்து மறைந்தவர்களையும் நினைக் கின்றோம். அயராது உழைத்த அவர்களின் பலனை கர்த்தர் அவர்களுக்கு கொடுப்பாராக.

தேவனுடைய வருகை வரையும் ஓய்வின்றி சீயோனின் ஊழியப்பயணம் தொடர இவ் அறுப தாவது ஆண்டில் அனலின் வாழ்த்துக்கள்.

ZI 60 N

# அனலின் குரல்

**அன்பான வாசக உள்ளங்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள்**

நமது ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையினாலே இவ் வருடத்தின் இறுதி நாட்களில் வந்திருக்கிறோம். தேவனுக்கே மகிமையுண்டாகட்டும்.

**யாத்திராகமம் 3:2 அங்கே கர்த்தருடைய தூதனானவர் ஒரு முட்செடியின் நடுவிலிருந்து உண்டான அக்கினிஜுவாலையிலே நின்று அவனுக்குத் தரிசனமானார்.**

கர்த்தருக்குப் பிரியமானவர்களே நீங்கள் விரும்பிய மலர்கள் உங்களுக்கு தென்படவில்லை அல்லது கிடைக்கவில்லை என கலங்கவேண்டாம். சிலவேளைகளில் மலர்களுக்குள் காணப்படாத தேவ பிரசன்னம் முட்செடிகளுக்குள் காணும்படி தேவன் செய்வார். உங்கள் வாழ்வில் முட்செடி போன்ற கசப்பான அனுபவங்களுக்கூடாக நீங்கள் வந்து கொண்டிருக்க முடியும். உங்கள் வாழ்வில் நீங்கள் செல்ல இருக்கின்ற பாதை எதுவென காட்டுவதற்காக அந்த முள்செடியின் மத்தியில் தேவ பிரசன்னம் கடந்து வரும். என் வாழ்வை இது நெருக்குகிறது, என் வாழ்வை இது குத்துகிறது என நீங்கள் எண்ணும் அப்பகுதிக்குள் தேவன் தன் பிரசன்னத்தை வைத்து உங்கள் வாழ்வில் வழிகாட்ட, அதனூடாக உங்களுடன் பேச ஆவலாக இருக்கின்றார்.

1. முட்செடியின் அனுபவங்களுக்குள் தேவ பிரசன்னத்தைக் காணும் போது முதலாவது தேவன் உங்களுடன் பேச காத்திருக்கிறார் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். (யாத்திராகமம் 3:4)
2. எமது மாமிச இச்சை ஆசைகளைக் கழற்றிப் போட வேண்டும் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். (யாத்திராகமம் 3:5)
3. கர்த்தரின் பெரிதான அழைப்பு உங்களுக்கு உண்டு என்பதைக் கண்டு கொள்ளுங்கள். (யாத்திராகமம் 3:10)

எகிப்தின் அரண்மனையில் பார்வோனின் குமாரத்தியின் மகன் போன்று இருந்த மோசேக்கு உண்மையில் ஆடுகளை மேய்ப்பதென்பது ஒருவேளை முட்களாய் அவனைக் குத்தியிருக்கும்.

எகிப்தின் சகல சாஸ்திரங்களையும் கற்றுத்தேர்ந்த மோசேக்கு ஆடுகளுடன் வனாந்தரத்தில் திரிவதென்பது முள்ளான அனுபவம் தான்.

முள்ளான அனுபவங்களுடன் நடமாடிய மோசேக்கு முட்செடியில் இருந்தே தேவ சத்தம் கேட்டது.

உங்கள் அனுபவங்கள் வேதனையானது ஆனால் தேவன் அதைப் புரிந்து உங்களுடன் உறவாடுவார், பேசுவார். உங்கள் எதிர்கால வாழ்வில் திட்டங்களை வெளிப்படுத்துவார். நீங்கள் செல்கின்ற வேதனைக்குள் தேவன் தன் பிரசன்னத்தை தருவார்.

வரப்போகின்ற புதிய வருடத்தில் தேவனை நோக்கி நடக்க புதிய அனுபவத்தையும், ஆசீர்வாதங்களையும் தேவன் உங்கள் வாழ்வில் தருவாராக.

– ஆசிரியர் –




❑ வை. விமலதாஸ்

ஒவ்வொரு வார இறுதிக்குப் பின்னும் திங்கட்கிழமைகளில் வகுப்பினுள் நுழைகிறார் ஆசிரியை றீட்டா. அவருக்கு ஒரு வழக்கம் இருந்தது. அது தான் வகுப்பறைக்குள் நுழைந்ததுமே மாணவர்களைப் பார்த்து 'உங்கள் எல்லோரையும் நான் நேசிக்கிறேன்' என்று சொல்வது. அவர் பொய் சொல்கிறார் என்பது அவருக்கே தெரியும். ஏனெனில் அந்த வகுப்பிலுள்ள ஒரேயொரு மாணவனை மட்டும் அவரால் நேசிக்க முடியவில்லை. ஒழுங்காய் உடுத்தாத, எதிலுமே ஒழுங்காய் இல்லாமல் சுட்டிக்காட்டுவதற்கு எந்தவொரு சிறந்த காரியங்களும் இல்லாத 'பீற்றர்' என்கிற போல்பீற்றர்!. அவனுடன் மட்டும் ஆசிரியை றீட்டா நடந்து கொள்ளும் விதம் வித்தியாசமானது. எந்தவொரு தவறான விடயத்திற்கும் அவனையே உதாரணம் காட்டும் அவர் எந்த நல்ல விஷயத்திற்கும் அவனை நிராகரித்தார்.

அவ்வாண்டிற்கான காலாண்டு பரீட்சை வந்தது. பிள்ளைகளின் பெறுபேற்று அறிக்கைகள் வகுப்பாசிரியரிடமிருந்து அதிபரின் கையொப்பத்திற்காக அனுப்பப்பட்டது. பிள்ளைகளின் தேர்ச்சி அறிக்கைகளை *(Report)* மேற்பார்வை செய்து கையொப்ப மிட்டுக் கொண்டிருந்த அதிபர் ஆசிரியை றீட்டாவை அழைத்தார். ஆசிரியர் றீட்டா வந்ததும் 'பெறுபேற்று அறிக்கை என்பது ஒரு பிள்ளையின் முன்னேற்றத்தை அறிவிக்க வேண்டும். தன் பிள்ளைக்கும் ஓர் எதிர்காலம் உண்டென்ற நம்பிக்கையை பெற்றோருக்கு தரவேண்டும்! ஆனால் நீங்கள் எழுதியிருப்பதை பார்க்கும் போது பெற்றோர் அவன் மீது நம்பிக்கை இழந்துவிடுவார்கள்' என்று கேள்விக்குறியுடன் பீற்றரின் முன்னேற்ற அறிக்கையை சுட்டிக்கேட்டார்.

உடனே றீட்டா 'என்னால் ஒன்றுமே செய்ய முடியாது, அவனைக் குறித்து எழுதுவதற்கு என்னிடம் ஒரு நல்ல விஷயம் கூட இல்லை' என்றார். உடனே அதிபர்

அங்கு நின்று நிர்வாக ஊழியர் ஒருவரிடம் கடந்த ஆண்டுகளுக்கான பீற்றரின் முன்னேற்ற அறிக்கைகளை றீட்டாவுக்கு கொடுக்குமாறு பணித்தார். அறிக்கைகள் வருகிறது. ஒவ்வொரு ஆண்டாய் விபரித்துப் படிக்கிறார் ஆசிரியர் றீட்டா. நான்காம் ஆண்டறிக்கை சொன்னது 'பீற்றரின் தாய் இறுதி நிலை கான்சர் நோயால் பாதிக்கப்பட்டுள்ளார். அதனால் பீற்றர் மீது முன்னர் போன்று அவரால் கவனம் செலுத்த முடியவில்லை. அதன் விளைவு அவனிடம் தெரிய ஆரம்பித்திருக்கிறது.' ஐந்தாம் ஆண்டறிக்கை இவ்வாறு சொன்னது 'பீற்றரின் தாயார் இறந்துவிட்டார், அவனுக்கு அவசரமாய் வழிகாட்டல் தேவைப்படுகிறது. இல்லையேல் நாம் அந்தக் குழந்தையை இழந்துவிடுவோம்' கண்களில் கண்ணீருடன் ஆசிரியர் றீட்டா அதிபரைப் பார்த்துச் சொன்னார்: 'என்ன செய்ய வேண்டும் என்பது இப்போது எனக்குத் தெரியும்'

அடுத்த திங்கட்கிழமை காலை ஆசிரியை றீட்டா வகுப்பறைக்குள் சென்று பிள்ளைகளைப் பார்த்து வழக்கம் போன்று 'பிள்ளைகளே நான் உங்கள் எல்லோரையும் நேசிக்கிறேன்' என்றார். இம்முறையும் அவர் பொய் சொல்கிறார் என்பது அவருக்குத் தெரியும். ஏனென்றால் தற்போது மற்றக் குழந்தைகளைவிட பீற்றர் மீதிருக்கும் அவரது அன்பு அளவு கடந்திருந்தது. பீற்றருடனான தன் அணுகுமுறையை உடனே மாற்றுவதென்று அவர் தீர்மானித்திருந்தார். அதன் பின்னர் ஒவ்வொரு நல்ல விஷயத்திற்கும் பீற்றரின் பெயர் உச்சரிக்கப்பட்டது. ஒவ்வொரு தவறான உதாரணங்களின் போதும் அவன் பெயர் கவனமாய் தவிர்க்கப்பட்டது.

அந்த ஆண்டின் பள்ளி இறுதி நாள் வந்தது. அனைத்து மாணவர்களும் தம் ஆசிரியருக்கென்று பரிசுகள் கொண்டு வந்திருந்தார்கள். அதற்குள் ஒரு பெட்டி மாத்திரம் பழைய செய்தித்தாளினால் சுற்றப்பட்டிருந்தது. ஆசிரியை றீட்டா அதைப் பார்த்ததுமே அது பீற்றரிடமிருந்து தான் வந்திருக்க வேண்டுமென அவருடைய உள்ளுணர்வு சொல்லியது. முதலில் அதையே பிரித்தார். பிரித்ததும் அதனுள் பாதி உபயோகித்த சென்ட் போத்தல் ஒன்றும் சில கற்கள் கழன்று விழுந்த மணிமாலை ஒன்றும் இருந்தது. அது பீற்றருடையது என்று புரிந்து கொண்ட முழு வகுப்பறையுமே சிரித்தது. ஒன்றுமே சொல்லாமல் ஆசிரியை றீட்டா அந்த வாசனைத் திரவியத்தை தன் மீது பூசிக்கொண்டார். அந்த மணிமாலையை எடுத்து தன் கையில் அணிந்து கொண்டார்.

மெல்லியதாய் ஒரு கால்வாசி புன்னகையுடன் பீற்றர் சொன்னான் "இப்போது உங்களிடம் என் தாயின் வாசம் வருகிறது, அம்மா இறப்பதற்கு முன் அவர் இறுதியாக பாவித்த சென்ட் இது தான், இந்த மணிமாலை தான் அவர் கரத்தில் அணிந்திருந்தார்". ஓராண்டு கழிந்தது. ஆசிரியை றீட்டாவின் மேசையில் ஓர் கடிதம் கிடந்தது, அதில் 'நான் பல ஆசிரியர்களைப் பார்த்திருக்கிறேன். ஆனால் நீங்கள் நான் பார்த்த சிறந்த ஆசிரியர் – அன்புடன் பீற்றர்' இவ்வாறு தொடர்ந்து வந்த ஒவ்வொரு ஆண்டுகளிலும் றீட்டாவின் மேசையில் கடிதம் அதே வரிகளுடன் காணப்படும். ஆண்டுகள் பல வேகமாய் உருண்டன. அவர்களுக்கிடையேயான தொடர்பு எப்படியோ அறுந்து போனது. இப்போது ஆசிரியை றீட்டாவும் பணி ஓய்வு பெற்றிருந்தார். பல ஆண்டுகளின் பின் அவருக்கு ஒரு கடிதம் வந்து சேர்ந்தது. அது 'டாக்டர் போல்பீற்றர் (பீற்றர்)' அவர்களிடமிருந்து. திருமதி றீட்டா 'நான் என் வாழ்க்கையில் இன்னும் பலரைப் பார்த்திருக்கிறேன். நான் பார்த்த சிறந்த ஆசிரியர் நீங்கள். இப்போது நான் திருமணம் செய்து கொள்ளப்போகிறேன். நீங்கள் இல்லாமல் திருணமத்தை நடாத்த முடியாது.

தயவு செய்து கலந்து கொள்ளுங்கள். உங்கள் அன்பு டாக்டர் பீற்றர். அத்துடன் அவர் திருமணத்திற்கு சென்றுவருவதற்கான விமான டிக்கட்டுக்களும் இணைக்கப்பட்டிருந்தன. ஆசிரியை நீட்டாவுக்கு இருப்பு கொள்ளவில்லை. அவரிடம் அந்த சென்ட் போத்தல் இப்போது இல்லை. ஆனால் மணிமாலை பாதுகாப்பாய் இருந்தது. அதை அணிந்து கொண்டு திருமணத்திற்கு சென்றார்.

தேவாலத்திற்கு சென்று பின் இருக்கையொன்றில் அமர முற்பட்டவரை அங்கிருந்த ஊழியர்கள் எப்படியோ அடையாளம் கண்டு அவரை முன்வரிசையில் இருந்த ஆசனம் ஒன்றை நோக்கி அழைத்துச் சென்றனர். அவருக்கென ஒதுக்கப்பட்டிருந்த ஆசனத்தில் 'அம்மா' என்று எழுதப்பட்டிருந்தது. திருமணம் முடிந்து பீற்றர் தன் புதுமனைவியிடம் ஆசிரியை நீட்டாவை அறிமுகம் செய்து வைத்தார். 'இவர் மட்டும் என்னை உற்சாகப்படுத்தவில்லையென்றால் நான் இன்று இந்த இடத்தில் நின்றிருக்கவே முடியாது. பீற்றரின் கண்களில் கண்ணீர். ஆசிரியை நீட்டா மணப்பெண்ணைப் பார்த்து சொன்னார்; பீற்றர் இல்லையென்றால் ஒரு ஆசிரியர் தன் மாணவர்களுக்கு முதலில் ஒரு தாயாக இருக்க வேண்டுமென்பதை நான் அறிந்திருக்கவே முடியாது'

ஆம் நண்பர்களே இந்த ஆண்டு நிறைவடையப் போகிறது. ஆசிரியர் நீட்டாவைப் போன்று இந்த வருடத்தில் நீங்கள் எத்தனை பீற்றர்களை தூக்கி நிறுத்தியிருக்கிறீர்கள்; எத்தனை பேரை எழும்பவே முடியாதபடி அதைரியப்படுத்தி வைத்திருக்கிறீர்கள்? ஒருவருடைய பிரச்சினையை முழுமையாக புரிந்து கொள்ளாமல் அவர்களைக் குறித்து நீங்கள் யோசித்த யோசனைகள், அவர்களுக்கு நீங்கள் காண்பித்த எதிர்வினைகள் எப்படி இருந்தது? உங்களைச் சூழவும் பீற்றரைப் போன்ற எத்தனையோ பேர் உங்கள் உதவிக்காக காத்துக்கொண்டிருக்கிறார்கள். நீங்களும் ஆசிரியர் நீட்டாவைப் போன்று ஒருவருக்கு ஏணியாக இருக்க முடியும். உங்கள் வழிகளை சிந்தித்துப் பாருங்கள். **பிலிப்பியர் 2:3b மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள்.**

**2019**

**சரியான விடை எழுதியவர்களில் பரிசுக்குரியவர்களாக தெரிவு செய்யப்பட்டிருப்பவர்கள்:**



**வினாவிடை - 05**

எஸ்.டேவிட் சகாயநாதன்
யாழ்ப்பாணம்.

**குறுக்கெழுத்துப் போட்டி - 03**

ஆ.றெஜினா
நாவற்குழி.




❐ பர்னபா




**ஆபகூக் 2:3 குறித்தகாலத்துக்குத் தரிசனம் இன்னும் வைக்கப்பட்டிருக்கிறது; முடிவிலே அது விளங்கும், அது பொய் சொல்லாது; அது தாமதித்தாலும் அதற்குக் காத்திரு; அது நிச்சயமாய் வரும், அது தாமதிப்பதில்லை.**

அன்பான சகோதர சகோதரிகளே! இந்த ஆண்டின் இறுதிப்பகுதிக்குள் வந்துவிட்டோம். **ஆனால் ஆண்டின் தொடக்க பகுதிகளில் தேவன் உங்களுக்கு தந்த வார்த்தைகள், வாக்குத்தத்தங்கள், உங்களுடைய மன வாஞ்சைகள் இன்னமும் நிறைவேறாமல் இருப்பதினாலே சோர்ந்து மனமுடைந்து இருக்கிறீர்களா?** "தாமதம் செய்யும் நம் ஆண்டவர் தரமானதை தருவதற்காகவே தாமதிக்கின்றார்".

ஆபிரகாமை தேவன் அழைக்கும் போது அவன் எழுபத்தைந்து வயதுடையவனாய் இருந்தான். "உன்னை பெரிய ஜாதியாக்குவேன்" என்று அழைக்கும் அந்த நேரமே வாக்குக் கொடுத்தார். ஆதியாகமம் 12:2-4.

ஆனால் காலங்கள் தாமதித்த போது ஆபிரகாம் மனுஷீகத்தில் பலதரப்பட்ட யோசனைகளை யோசித்திருந்தாலும் கூட தேவன் கூறிய வார்த்தையை அவன் விசுவாசித்தான். ஒரு மாதமாக அல்ல ஒரு வருடமாகவும் அல்ல மாறாக இருபத்தைந்து வருடங்கள் தேவன் தாமதித்தார். ஆபிரகாமிற்கு நூறு வயதான போது ஈசாக்கை வாக்குப் பண்ணியபடியே கொடுத்தார். தாமதித்தாலும் தரமானதை தேவன் கொடுத்தார். "ஒன்று தந்தாலும் தாமதிக்கும் தேவனிடம் காத்திருந்து உருப்படியாக பெற்றுக் கொள்வீர்கள்". இந்த ஈசாக்கே பலியாக்கப்பட்ட நம் இயேசு கிறிஸ்துவுக்கு முதல் அடையாளமாக காணப்பட்டார். எனவே என் அன்பான சகோதரனே, சகோதரியே கலங்காதீர்கள். வேதனையடைந்து வாக்குத்தத்தத்தில் நொந்து கொள்ளாதீர்கள். **உங்கள் வாழ்க்கையில் தேவன்**

**தாமதிக்கிறார் என்றால் அது தரமானதை தருவதற்கே.**

அதே போன்று வயது சென்றவர்களான தம்பதிகள் இருந்தார்கள். அவர்களுக்கு பிள்ளை இல்லை. ஆனாலும் இருவரும் கர்த்தர் கொடுத்த சகல கற்பனைகளின் படியேயும் நியமங்களின் படியேயும் குற்றமற்றவர் களாய் நடந்து தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாயிருந்தார்கள். லூக்கா 1:6.

நீங்களும் தேவன் மேல் நம்பிக்கையுள்ளவர்களாக இருந்து குற்றமற்றவர்களாக நடந்தும் சகரியா எலிசபேத்தைப் போன்று நன்மையானதை அடையவில்லையே என ஏக்கத்தோடு இருக்கிறீர்களா? **பயப்படாதீர்கள். நீங்கள் அறியாத, எதிர்பார்த்திராத ஒன்றை தேவன் உங்களுக்காக ஆயத்தம் பண்ணியிருக்கிறார். தரமானதைத் தரும்படியாகவே தேவன் உங்கள் மேல் இவ்வளவு காலம் தாமதமாக இருந்தார்.**

சகரியா எலிசபேத் தம்பதிகளின் மூலமாக பிறந்த யோவானைக் கொண்டே தேவன் இஸ்ரவேலில் எழுப்புதலைக் கட்டளையிட்டார். ஜனங்கள் தேவன் பக்கமாக மனந்திரும்பி சேர்க்கப்பட்டார்கள். **எனவே பிரியமானவர்களே தேவன் தாமதிக்கும் காலங்களில் சோர்ந்து போகாமல் விசுவாசத்தை விட்டுவிடாமல் பொறுமையுள்ளவர்களாய் வாக்குத்தத்தம் பண்ணியவர் உண்மையுள்ளவர்; அவர் வாக்குமாற மாட்டார் என்று நம்பி உறுதியாக இறுதிவரைக்கும் காத்திருங்கள்.** "வாக்குப்பண்ணிய தேவன் உங்களுக்கானதை தரும் நேரம் வந்துவிட்டது. அவர் இனித் தாமதிக்கமாட்டார்".

மோசே மலையிலிருந்து வருவதற்கு தாமதிக்கிறதை இஸ்ரவேல் ஜனங்கள் கண்டு தங்களுக்கு ஒரு தெய்வத்தை உண்டாக்கினார்கள்- யாத்திராகமம் 32:1. சாமுவேல் வர தாமதிக்கிறார் என்றெண்ணி சவுல் பலியை செலுத்தினான் - 1சாமுவேல் 13:8-9. இன்றைக்கு இயேசு வர தாமதிக்கிறார் என்றெண்ணி திருச்சபையாகிய மணவாட்டி சோர்ந்துபோய் விசுவாசத்தை மறுதலித்து பின்வாங்கிப்போய் காணப்படுகிறது.

அன்பானவர்களே தாமதிக்கும் தேவனுக்காக இறுதிவரை காத்திருங்கள். நேரம் கடந்தாலும் காத்திருங்கள். மாற்றுவழியை அல்லது வேறு உபாயங்களைத் தேடவேண்டாம். விசுவாசத்தில் புருஷராக இருந்து தரமானதைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

சாராளை தேவன் நகைக்கப் பண்ணினார். எலிசபேத்தை நகைக்கப் பண்ணினார். உங்களையும் அவர் நகைக்கப்பண்ணுவார். அவருக்காக பொறுமையோடு விசுவாசத்தைக் காத்துக் கொள்ளுங்கள்.

தாமதிக்கும்தேவன்உங்களுக்கு தரமானதை தந்தருள்வாராக. **எசேக்கியேல் 12:25 நான் கர்த்தர், நான் சொல்லுவேன், நான் சொல்லும் வார்த்தை நிறைவேறும்; இனித் தாமதியாது.**




# எது உங்களுக்கு வேண்டும்?

பகுதி - 05

☐ போதகர் வை.தேவதாஸ்




'மரண வாசல்களிலிருந்து எங்களைத் தூக்கி விடுகிற தேவனிற்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக'. ஆம் பிரியமானவர்களே, அனைவருக்கும் வாலிபர் வளாகத்தின் சார்பாக அன்பின் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கடந்த நாட்களில் எத்தனையோ பல வாசல்கள் எமக்கு முன்பதாக திறக்கப்பட்ட நிலையில் மாத்திரம் அல்ல; எம்மை அவ் வாசல்களிற்குள் நுழைய அழைத்தன. ஆனாலும் அவைகளிற்குள் சென்று நாம் சீர்கெட்டுப் போய்விடாதபடி எம்மைப் பாதுகாத்த தேவனுக்கு ஸ்தோத்திரம். மாத்திரமல்ல பல மரணக் கண்ணிகளிற்கும் தேவன் உங்களை விலக்கிப் பாதுகாத்துள்ளதை நினைத்து அவரை மகிமைப்படுத்துங்கள்.**

ரெபேக்காளிற்கு தேவன் ஓர் வழியைத் திறந்தார். அப்பொழுது அவள் இவ்விதமாக வாழ்த்தப்பட்டாள்; **எங்கள் சகோதரியே, நீ கோடா கோடியாய் பெருகுவாயாக – ஆதியாகமம் 24:6** ஆமென். இவ்வண்ணமாகவே தேவன் உங்களது முந்தைய நிலைகளை மாற்றி புதிய பாதைகள் ஊடாக உங்களை நடத்தி ஆசீர்வதிப்பாராக. 'தேவன் காட்டுகின்ற பாதையில் உங்களுக்கு பரீட்சயம் இல்லாவிட்டாலும் அதில் செல்லுங்கள். அப் பாதையில் உறவுகளின் துணை இல்லாவிட்டாலும் அதில் செல்லுங்கள். தேவன் உங்களுக்கு துணையாக இருப்பார்'. நிச்சயம் அவர் உங்களை பெருகப்பண்ணுவார், ஆசீர்வதிப்பார் – ஆமென்.

தொடர்ந்து கடந்த இதழின் செய்தியின் தொடருக்குள் செல்வோம்.

## கர்த்தரையும், அவரது உண்மையான விசுவாச மக்களையும் நாடாமல் தனித்திருப்பது எத்தகைய தாக்கத்தை கொண்டு வரும் என நீங்கள்சிந்தித்துப்பார்த்ததுண்டா?

லோத்து என்பவர் தன் வாழ்வில் விட்ட தவறுகளைக் குறித்து ஆராய்ந்து வருகின்றோம். லோத்து தன் மனைவி, உடமைகள் அனைத்தையும் இழந்த பிற்பாடாவது ஆபிரகாமுடனும் அவரது கூட்டத்தினருடனும் சேர்ந்து வாழவோ அல்லது அவர்களது ஐக்கியத்தினைப் பெற்றுக்கொள்ளவோ முயற்சிக்கவில்லை.

கெட்டகுமாரனைப்பாருங்கள், **அவனுக்குப் புத்தி தெளிந்த போது – லூக்கா 15:17, நான் எழுந்து, என் தகப்பனிடத்திற்குப் போய் - லூக்கா 15:18.** வழி தப்பிப்போனான், தனது தகப்பன் வீட்டு ஐக்கியத்தை இழந்து தனித்துச் சென்றான்; இருப்பினும் அவனுக்கு புத்தி தெளிந்த போதோ தன் தகப்பனையும் அவரது வீட்டு சூழ்நிலை களையும் சிந்தித்துப் பார்க்கின்றான். 'உடனேயே தகப்பன் வீட்டினை நோக்கி ஓடி வருகின்றான்'. ஒருவேளை பன்றிகள் தின்னும் தவிடு அவனுக்குக் கிடைத்திருந்தால் அவன் பன்றி மேய்க்கும் வேலையிலேயே சிலகாலம் இருந்திருக்க வாய்ப்புண்டு. **இக் காலத்திலும் பன்றிகள் தின்கிற தவிடு போன்ற அற்பமான பாவ சிற்றின்பங்கள் கிடைப்பதால் அனேகர் புத்தி தெளியாமல் தொடர்ந்தும் பாவத்திலேயே வாழ்ந்து வருகின்றார்கள்.**

அருமையானவர்களே! பாவத்தினால் வரும் இன்பம் பன்றி தின்கிற தவிட்டுக்குச் சமமானதாகும். மிகவும் கேடான நிலைக்குச் சென்ற பின்னரே இதனை உணர்ந்து சிலர் ஆண்டவரைத் தேடுகின்றனர். இருப்பினும் ஜீவன் போகும் முன்னே மனந்திரும்புவது பாக்கியமே. 'இதை வாசிக்கின்ற நீங்கள் தேவனையும், திருச்சபை யையும் விட்டு ஏதோவொரு காரணத்தினால் தூரம் போன நிலையில் இருக்கலாம்; தேவனிடமும், தேவ ஜனங்களின் ஐக்கியத்திற்குள்ளும் திரும்பி வாருங்கள்'.

இப்படித்தான் தன் பெற்றோருக்கு ஒரே மகனாக இருந்த ஓர் வாலிபன் தன் பெற்றோரின் மனதை மிகவும் காயப்படுத்தி அவர்கள் விரும்பாத வழியில் ஓர் ஊதாரிப்பிள்ளையாக வாழ்ந்தான். வருடங்கள் கடந்து சென்றன. வீடு திரும்பச் சிந்தித்தான். ஆனாலும் தன்னை தன் பெற்றோர்கள் மன்னித்து ஏற்றுக்கொள்வார்களா? என சந்தேகப்பட்டான். பெற்றோரின் மனநிலையை அறிய தனக்கு அறிமுகமான ஒருவரை தூதனுப்பினான். பெற்றோரும் அவனது வருகைக்காக காத்திருப்பதனை தெரிந்து கொண்டான். இருந்தாலும் அதற்கு ஓர் அடையாளத்தை பெற்றோரிடம் கேட்டான். அதாவது தனது வீட்டில் உள்ள ஓர் பெரிய மரத்தில் ஓர் வெள்ளைக் கொடியை கட்டும்படியும் புகையிரதப் பாதைக்கு அருகில் வீடு இருப்பதால் தான் அதனைப் பார்த்து

*புகைவண்டியில் இருந்து இறங்குவேன் எனவும் சொல்லியனுப்பி அதற்கான நாளையும் குறித்து அனுப்பினான். அந்த நாள் வந்தது, புகையிரதத்தில் பயணப்பட்டான், அவனது மனதில் பல கேள்விகள். கொடி பறக்குமா? பறக்காதா? உண்மையில் தன் ஐக்கியத்தை ஏற்றுக்கொள்வார்களா? மாட்டார்களா? இவ்வாறு சிந்தித்துக் கொண்டுவர அவனது வீடும் நெருங்கி வந்தது. மிக ஆவலுடன் ஜன்னல் வழியே எட்டிப்பார்த்தான். ஒரு வெள்ளைக் கொடியை கட்டிவிடுங்கள் என்று தான் குறிப்பிட்டுச் சொன்ன மரத்தை உற்று நோக்கினான். என்ன மகிழ்ச்சி! மரம் முழுவதுமே பல பல வெள்ளைக் கொடிகளினால் அலங்கரிக் கப்பட்டு அவனது வருகையை மிகவும் மகிழ்வுடன் வரவேற்றது.*

நீங்களும் இவ் வாலிபனைப் போல் திரும்ப நான் போகலாமா? என்னை ஏற்றுக்கொள்வார்களா? என்ற பல கேள்விகளோடு இருக்கலாம். வீணே உங்களை நீங்களே அலட்டிக் கொள்ளாமல் உண்மையான மனதுடன் திரும்பி வாருங்கள். உங்கள் வருகைக்காக பல வெள்ளைக் கொடிகள் பறந்து கொண்டிருக்கிறது. அதிலும் மேலாக 'உங்கள் பரம தகப்பன் மிக ஆவலோடு உங்களுக்காக காத்துக் கொண்டிருக்கிறார்'. லோத்துவினுடைய முதலாவது பெலவீனமாக தனக்கு எது சரியோ அதனையே செய்தார் எனவும் இரண்டாவதாக தன் துணையை தேவ பயமுள்ள வாழ்விற்குள் நடத்த தவறியதையும் கடந்த இதழில் பார்த்தோம்.

இன்றைய பகுதியில் அவரது மூன்றாவது பெலவீனம் அல்லது தோல்வியைக் குறித்து பார்த்து லோத்துவின் வேதபாட ஆய்வினை அல்லது லோத்துவைக் குறித்த செய்தியை நிறைவு செய்யப்போகின்றோம்.

## 03. நகர வாழ்வின் அநாகரீக முறைகளை பிள்ளைகள் கற்றுக்கொள்ள இடங்கொடுத்தார்

தான் குடியேறிய நகரத்தில் பெரும் பதவியை லோத்து அடைந்த போதிலும் தனது உடைமைகளையும், தனது மனைவியையும் இழந்தார். இந் நிலையில் அவருக்கு இருந்த ஒரே ஒரு ஆறுதல் அவரது பிள்ளைகளே. அதுவும் இரு பெண்பிள்ளைகள். சரிந்து போன அவரது வாழ்வு; உடைந்து போன அவரது உள்ளம் அனைத்திற்கும் அருமருந்தாக அவரது பிள்ளைகள் இருந்திருக்க வேண்டும். ஆனால் அவரது இரு மகள்களுமோ அவர்கள் வாழ்ந்த நகரத்தின் முறை கேடுகளைக் கற்றுக் கொண்டு அதன்படி நடந்தனர் என்பதை வேதத்தில் வாசிக்கிறோம். **ஆதியாகமம் 19:31 அப்பொழுது மூத்தவள் இளையவளைப் பார்த்து: நம்முடைய தகப்பன் முதிர்வயதானார், பூமியெங்கும் நடக்கிற முறையின்படியே நம்மோடே சேரப் பூமியிலே ஒரு புருஷனும் இல்லை.** பூமியெங்கும் ஒரு புருஷனும் இல்லை என இவர்கள் கூறியது வேடிக்கையாக காணப்படுகிறது. அப்படித்தான் இருப்பினும் 'தங்களை மரண அழிவில் இருந்து காத்த தேவன் ஏற்ற துணையையும் தருவார்' என காத்திருக்க வேண்டும். ஆனால் இவர்கள் செய்தது என்ன?

**ஆதியாகமம் 19:32 நம்முடைய தகப்பனால் சந்ததி உண்டாகும்படிக்கு, அவருக்கு மதுவைக் குடிக்கக்கொடுத்து, அவரோடே சயனிப்போம் வா என்றாள்.** எப்படி சிந்தித்து திட்டமிடுகின்றனர் என்பதைப் பாருங்கள். இந்த அறிவு இவர்களுக்கு எங்கிருந்து வந்தது? இந்த முறைகேடுகளை இவர்கள் எங்கிருந்து கற்றுக் கொண்டார்கள்? உண்மையில் சொல்லப்போனால் இவர்களது தாய் தனது ஊரையும், தனது உடைமைகளையும் தேவனைவிடவும், தனது கணவனை விடவும் அதிகமாக நேசித்து தேவ கட்டளையை மீறி திரும்பிப் பார்த்து உப்புத்தூணாக மாறினாள். ஆனால் இவர்களோ சோதோமின் பழக்க வழக்கங்களை தங்களுடன் சுமந்து கொண்டு வந்தனர். தேவனுக்கு பிரியமான சிறுகாரியத்தைக் கூட இவர்கள் பேசவோ செய்யவோ இல்லை. **ஆதியாகமம் 19:36 இவ்விதமாய் லோத்தின் குமாரத்திகள் இருவரும் தங்கள் தகப்பனாலே கர்ப்பவதியானார்கள்.**

என்ன ஓர் கீழ்த்தரமான செயல்! வரம்பு மீறிய பாலுறவுப் பாவங்களுக்கு சோதோம் கொமொரோ எடுத்துக்காட்டாக இருந்தது. இக் கொடிய பாவத்தின் மிகுதியினாலேயே தேவன் இப் பட்டணங்களை அக்கினியால் அழித்தார். ஆனால் தேவன் விரும்பாத முறைகளை லோத்துவின் பிள்ளைகள் பின்பற்றுவதைப் பார்க்கிறோம். ஒருவேளை லோத்து ஆபிரகாமிடம் திரும்பிச் சென்று தங்கியிருந்தால் தனது பிள்ளைகளுக்கு சிறந்த திருமண ஏற்பாடுகளை செய்திருக்க முடியும். ஆனால் அவரோ **ஆதியாகமம் 19:30 பின்பு லோத்து சோவாரில் குடியிருக்கப் பயந்து, சோவாரை விட்டுப்போய், அவனும் அவனோடேகூட அவனுடைய இரண்டு குமாரத்திகளும் மலையிலே வாசம்பண்ணினார்கள்; அங்கே அவனும் அவனுடைய இரண்டு குமாரத்திகளும் ஒரு கெபியிலே குடியிருந்தார்கள்.** தனித்து ஓர் கெபியில் வாசம்பண்ணுவதைப் பார்கிறோம். ஏதோ ஒருவிதமான மன இறுக்கம் லோத்துவை ஆபிரகாமிடத்தில் செல்லவிடாமல் தடுத்திருந்தது என ஊகிக்க முடிகிறது.

ஒருவேளை லோத்து ஆபிரகாமிடம் வரும்போது தான் புறக்கணிக்கப்படுவேனோ என்ற எண்ணமும் அவருக்குள் உருவாகியிருக்கலாம். ஆனால் அதற்கான வாய்புக்கள் இல்லை. ஏனெனில் ஒருமுறை லோத்து சிறைப்பட்டுப்போன போது ஆபிரகாம் தனது உயிரைக் கொடுத்து யுத்தம் செய்து லோத்துவையும் அவனோடிருப்பவர்களையும் மீட்டதை முந்தைய அதிகாரங்களில் காணமுடிகின்றது. ஆக லோத்துவிற்கு ஆபிரகாமின் வீட்டு வாசல் திறந்தே இருந்துள்ளது என்பதை அனுமானிக்க முடிகின்றது.

இப்படியிருக்க லோத்து ஆபிரகாமை நாடாமல் தனித்திருந்தது அவரது வாழ்வின் பலவித இன்னல்களுக்கு காரணமாகிவிட்டது. தெய்வ பக்தி நிறைந்த நல்ல உறவினர் அவருக்க இருந்த போதிலும் ஜெபத்துடனும், பணிவுடனும், ஐக்கியத்துடன் அவருடன் சேர்ந்து வாழ முடியாதவராக லோத்து காணப்பட்டார்.

இதனை வாசிக்கின்ற நீங்கள் உங்களைக் குறித்து சற்றே சிந்தித்துப் பாருங்கள். **கர்த்தரையும் அவரது மக்களையும் நாடாமல் தனித்திருந்தால் பின்னால் வரும் துன்பங்களை இப்பொழுதே எண்ணிப்பாருங்கள்.** வேதம் என்ன

சொல்கிறது: **பிரசங்கி 4:9 ஒண்டியாயிருப்பதிலும் இருவர் கூடியிருப்பது நலம்; அவர்களுடைய பிரயாசத்தினால் அவர்களுக்கு நல்ல பலனுண்டாகும்.** 'ஒரு போதும் உங்கள் வாழ்வில் தனிமையை நாடவேண்டாம்'. **நல்ல உறவினர்கள், நண்பர்கள் என்போரை உங்களுக்காக தேடிக்கொள்ளுங்கள்.** குறிப்பாக ஜெப வாழ்வுள்ள **வர்களின் ஐக்கியத்தை இழந்துவிடாதீர்கள்.** ஒருவேளை இதனை வாசிக்கும் நீங்கள் 'ஓர் ஊழியராக இருப்பின் தன்னந்தனியாக ஊழியம் செய்வதைவிட மற்றவர்களோடு இணைந்து ஊழியம் செய்ய பிரயாசப்படுவது நல்லது'. லோத்துவைப் போல சுயநலத்தினால் உங்களது பார்வைக்கு நலமானதை தெரிந்து கொண்டு இன்னல்களை அனுபவிக்க வேண்டாம் என்பது தான் எனது தாழ்மையான கருத்து.

**ஆக லோத்து தன் பிள்ளைகள் சீர்கெட்டுப் போவதற்கு ஓர் காரணமாக அமைந்துவிட்டார்.**

அதே நேரம் லோத்து பல காலமாக சோதோமில் குடியிருந்ததால் அவ்விடத்துப் பழக்க வழக்கங்களை லோத்துவின் பிள்ளைகள் கைக்கொண்டனர். இதே நேரம் லோத்துவின் பிள்ளைகள் செய்தது சரியென்று வேதம் கூறவில்லை. என்ன நடந்தது என்பதை மட்டுமே வேதாகமம் பதிவிட்டுள்ளது. ஒருவேளை அவர்கள் அதற்கான தண்டனையைப் பெற்றிருக்கக்கூடும். மேலும் அவர்களின் சந்ததியாருக்குச் சாபம் உண்டாயிற்று. **அம்மோனியரும் மோவாபியரும் பத்தாம் தலைமுறையிலும் என்றென்றைக்கும் கர்த்தருடைய சபைக்கு உட்படலாகாது – உபாகமம் 23:3** என வேதம் கூறுகின்றது. ஆம் பிரியமான வாலிபப்பிள்ளைகளே! நீங்கள் எச் சூழ்நிலையில் வாழ்ந்தாலும் நீங்கள் வாழுகின்ற பாவ சூழ்நிலைகள் உங்களை பாதிக்காதபடி பார்த்துக் கொள்ளுங்கள். **தற்போதைய நகர வாழ்க்கையின் அநாகரிங்களை கற்றுக்கொள்ளாமல் வேதாகம முறைகளை பின்பற்றுங்கள்.** உங்களை அழைத்த தேவனுக்கும், உங்களை நம்பியிருக்கும் பெற்றோருக்கும், உங்களுக்கு உறுதுணையாக இருக்கும் உங்கள் திருச்சபைக்கும் ஓர் போதும் அவமானத்தைக் கொண்டுவராதபடிக்கு பாருங்கள்.

*சமீபத்தில் குறிப்பிட்ட நாட்டில் திருமணத்திற்கு முன்பு ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழ்வதை தண்டனைக்குரிய குற்றமாக்குவதற்காக பாராளுமன்றம் கூடியபொழுது அந் நாட்டின் பல இளைஞர், யுவதிகள் அதற்கு எதிராக கடும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டமையால் அச் சட்டம் அமுலுக்கு வராமலேயே போனது.*

பாருங்கள் அங்கு அவர்கள் விரும்புவது என்ன என்பதை அவர்களது எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் இருந்து அறியமுடிகின்றது. ஆனால் நீங்களோ அப்படியானவர்கள் மத்தியில் வாழ்ந்தாலும் அவர்களது விருப்பங்களை உங்களது விருப்பங்களாக மாற்றாதிருங்கள். அவர்கள் பாவ இச்சைகளிற்காக கையாளும் யுக்திகளை நீங்கள் கைக்கொள்ளாதிருங்கள். தேவகிருபை உங்களை தாங்குவதாக.

அன்பின் வாசகர்களே, இதுவரை ஐந்து பகுதிகளாக லோத்துவின் சரித்திரத்தினை விபரித்திருந்தேன். பொறுமையாக வாசித்த உங்களுக்கு நன்றிகள். மேலும் இவ் ஐந்து பகுதிகளும் ஐந்து அனல் இதழ்களில் பிரசுரமாகியுள்ளன. ஒருவேளை ஏதாவது ஓர் பகுதியை நீங்கள் தவறியிருந்தால் சிரமம் பாராது அப்பகுதிக்கான இதழையும் பெற்று வாசிக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன். அப் பிரதி கிடைக்காவிட்டால் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள். அத்தோடு ஏதாவது கருத்துக்கள், எழுத்தாடல் முறைகள் உங்களுக்கு புரியாதிருந்தால் அல்லது தவறுகள் ஏதாவது இருப்பினும் தயவு செய்து தெரியப்படுத்துங்கள். அதைவிட உங்கள் வாழ்விற்கு ஏதாவது ஓர் பகுதி உதவி புரிந்திருந்தாலோ! ஆசீர்வாதமாக இருந்திருந்தாலோ அதனையும் தெரியப்படுத்த மறவாதிருங்கள்.

முடிவாக லோத்துவின் சரித்திரத்தை வாசித்த நேயர்களே! லோத்துவையும் ஆபிரகாமையும் ஒப்பிட்டுப்பாருங்கள். இருவருடையதுமான பிரயாண ஆரம்பம் ஒன்று தான். ஆனால் இடையில் லோத்து இவ் உலக நன்மைக்கு அடையாளமான யோர்தான் சமவெளியை நாடிச்சென்றார். ஆனால் ஆபிரகாமோ **எபிரெயர் 11:10 ஏனெனில், தேவன் தாமே கட்டி உண்டாக்கின அஸ்திபாரங்களுள்ள நகரத்துக்கு அவன் காத்திருந்தான்.** தான் போகும் இடம் இன்னதென்று அறியாதுவிட்டாலும் தேவனுடைய வார்த்தையை முற்றிலும் நம்பி, அவரையே முற்றிலுமாக சார்ந்து, வேறு எதனையும் முன்நிறுத்தாமல் முற்றிலும் கீழ்ப்படிந்தார்.

ஆபிரகாம் பரலோக சிந்தையுள்ளவராய் இருந்ததனால் தேவனால் கட்டப்பட்ட பரம எருசலேமை எதிர்பார்க்கும் விசுவாசமுள்ளவராக இருந்தார். இந்த உலகத்தில் வீடு வேண்டாம் என்று தீர்மானிக்கும் அளவுக்கு பரலோக வீட்டைக் குறித்த சிந்தையுள்ளவராக காணப்பட்டார். **எபிரெயர் 11:9-10, 16.**

பிரியமானவர்களே உங்களுக்காக பூமியில் வந்து, சிலுவையில் மரித்து, மூன்றாம் நாள் உயிரோடு எழுந்து பரலோகம் சென்ற இயேசு தான் இருக்கும் இடத்தில் நீங்களும் இருக்க வேண்டும் என விரும்புகின்றார். எனவே உங்களை அழைத்துச் செல்ல அவர் வரப்போகின்றார். அவரோடு செல்ல வாஞ்சையோடு காத்திருங்கள் - ஆமென்.

## இந்த நொடியை அவிழுங்கள் பார்க்கலாம்!

"தண்ணீரைச் சுவராக்கி சத்துருவை தரையாக்கினோமே என தாண்டவமாடி கூத்தாடி வந்த கூட்டம்; வனாந்தரத்தில் மூன்று நாள் நீர் தேடி, நீரைக் கண்டதும் பருகாமல் முகம் சுளித்து தலைவனிடம் முறுமுறுத்து 'கசப்பு' என பெயர் சூட்டினர்" அந்த இடம் எது?

*இதற்கான விடையையும் எழுதி அனுப்பி பாராட்டைப் பெற்றுக் கொள்ளுங்கள்.*

அனல் 2019 புரட்டாதி - ஐப்பசி மாதங்களில் கேட்கப்பட்ட நொடிக்கான விடை:

சீட்டு

(1சாமு 10:20-21, 14:42, யோனா 1:7, அப். 1:26, மத்தேயு 7:35, எண் 26:55, யோசுவா 13:6, 14:1)

விடைகளை எழுதி அனுப்பிய அனைவருக்கும் எமது பாராட்டுக்கள்.




❒ திருமதி. J.பிலிப்

2019ஆம் ஆண்டு ஆரம்பித்த போது மிகவும் மகிழ்ச்சியாய் இருந்தது. ஆனால் இன்னும் ஒரு சில நாட்களில் இவ்வாண்டு முடிவடையப்போகிறது. கர்த்தர் இவ் ஆண்டு கொடுத்த வாக்குத்தத்தம் என்ன? **"கர்த்தர் நம்மை நினைத்திருக்கிறார், அவர் ஆசீர்வதிப்பார்" சங்கீதம் 112:15.** ஆனால் என்னுடைய வாழ்க்கையில் நான் எதிர்பார்த்த ஆசீர்வாதம் எனக்கு இன்னமும் கிடைக்கவில்லையே! என அங்கலாய்க்கிற சகோதரியே உனக்கு ஒரு செய்தி காத்திருக்கிறது.

ஜெப சிந்தையுடன் இதை வாசிப்பாயாக.

**நீதிமொழிகள் 28:20 உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவான்.** 'கர்த்தர் நமக்கு பரிபூரண ஆசீர்வாதங்களை தருவதற்கு ஆயத்தமாய் இருக்கிறார்'. ஆனால் அவருடைய பிள்ளைகளாகிய எங்களிடம் அவர் ஒரு காரியத்தை எதிர்பார்க்கிறார். அதுதான் எம்முடைய வாழ்க்கையில் காணப்படவேண்டிய **"உண்மைத்தன்மை".** உண்மையுள்ளவர்களுக்கு 'ஆசீர்வாதம்' என்று குறிப்பிடப்படவில்லை மாறாக **'பரிபூரண ஆசீர்வாதம்'** என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. சகோதரியே இவ் ஆண்டு முடிவதற்கு முன்பு உன்னுடைய உண்மைத்தன்மையை ஆராய்ந்து பார்ப்பது நல்லது. உன்னுடைய




சிந்தனையில் உண்மை, பேச்சில் உண்மை, நீ கேட்கும் காரியங்களில் உண்மை, உன் செய்கையில் உண்மை, உன் நடத்தையில் உண்மை. **அப்போது தான் நீ "பரிபூரண ஆசீர்வாதங்களைப்" பெற்றுக் கொள்வாய்.**

வேதாகமத்தில் **மாற்கு 5:33b உண்மையையெல்லாம் அவருக்குச் சொன்னாள்.** அப்படி என்ன உண்மையை இயேசுவுக்கு கூறியிருப்பாள்? என சிந்திக்கிறாயா. **பன்னிரண்டு வருடமாய் பெரும்பாட்டுடன்**

**இருந்த ஸ்திரீ இயேசுவிடம் வந்த போது உண்மையையெல்லாம் அவருக்குச் சொன்னாள்.** 'தன்னைத் தொட்டது யார்?' என்று இயேசு கேட்ட போது தன்னைக் காண்பித்துவிட்டு பேசாமல் ஜனக்கூட்டத்திற்குள் மறைந்து போய் இருக்க லாம். ஆனால் அவள் உண்மையையெல்லாம் இயேசுவுக்கு சொன்னாள் என்று எழுதியிருக் கிறது. என்ன உண்மைகள் என்பதை சற்று சிந்திப்போமாக.

**மாற்கு 5:25 அப்பொழுது பன்னிரண்டு வருஷமாய்ப் பெரும்பாடுள்ள ஒரு ஸ்திரீ,** 'பன்னிரண்டு வருடங்களாய் நான் பெரும் பாடுள்ள வியாதியுடன் இருந்தேன்' என வியாதி யைக் குறித்து ஒழிக்காமல் மறைக்காமல் இயேசுவுக்கு கூறியிருப்பாள். 'எந்தெந்த வைத்தி யரிடம் சென்று என்னென்ன மருந்துகள் எடுத்தேன்' என்றும் கூறியிருப்பாள் என நினைக்கி றேன். அது மட்டுமா தன்னிடம் இருந்த எல்லா வற்றையும் செலவு செய்தும் குணமடையாமல் அதிக வருத்தத்துடன் இருக்கும் போது தான் இயேசுவாகிய உம்மைக் குறித்து கேள்விப்பட் டேன். உம்மைக் காணும்படி வந்த போது ஜனக்கூட்டம் அதிகமாக காணப்பட்டது ஆனாலும் 'உம்முடைய வஸ்திரத்தையாகிலும் தொட்டால் சொஸ்தமாவேன்' என்று நினைத்து உமக்குப் பின்பாக வந்து உம்முடைய வஸ்திரத்தை தொட்டேன்; உடனடியாக என்னுடைய உதிரத்தின் ஊறல் நின்று போயிற்று. 'வேதனை நீங்கி ஆரோக்கியமடைந்ததை தன் சரீரத்தில் உணர்ந்ததாக' கூறியிருப்பாள். **உண்மையை யெல்லாம் கூறிய ஸ்திரீயைப் பார்த்து இயேசு மகளே "உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது. நீ சமாதானத்தோடே போய், உன் வேதனை நீங்கி சுகமாயிரு"** என்றார்.

இதை வாசிக்கும் சகோதரியே உன்னை யும் பார்த்து இயேசு **"உன் வேதனை நீங்கி சுகமாயிரு"** என்று கூறவேண்டும் என்று விரும்புகிறாயா? வேதனை நீங்கினால் உனக்கு கிடைக்கப்போவது 'இயேசுவின் ஆசீர்வாதம்'. உண்மையை யெல்லாம் சொன்னவளுக்கு கிடைத்தது "பரிபூரண ஆசீர் வாதம்" என்ற பரிசு. இவ் ஆண்டு உன்னுடைய உண்மைத் தன்மையை உன் தேவனுக்கு முன்பாக சற்று ஆராய்ந்து பார். **வாலிப சகோதரியே உன் பெற்றோருக்கு உண்மையை யெல்லாம் கூறினாயா? மனைவி என்ற ஸ்தானத்தில் இருக்கும் சகோதரியே உன் கணவனுக்கு உண்மையையெல்லாம் கூறி னாயா? உன் தேவன் உனக்கு கொடுத்த சபைக்கும், உன் போதகருக்கும் உண்மையாய் இருந்தாயா?** உண்மையுள்ள வனாய் இருந்தால் "பரிபூரண ஆசீர்வாதத்தை" பெற்றுக் கொள்வாய்.

**நீதிமொழிகள் 10:22 கர்த்தரின் ஆசீர்வாதமே ஐசுவரி யத்தைத் தரும்; அதனோடே அவர் வேதனையைக் கூட்டார்.**

---






❑ ஜசிந்தா அக்கா




தோமஸ் எடிசன் தன் தாய்க்கு ஒரே மகன். அவன் தன் தாயினால் மிகவும் அன்பாக நேசிக்கப்பட்டான். தாயின் அன்பு மொழிகளாலும், அரவணைப்பினாலும் வளர்க்கப்பட்டான்.

ஒருநாள் தோமஸ் எடிசன் பாடசாலையிலிருந்து வந்து தன் தாயினிடத்தில் ஒரு கடிதத்தைக் கொடுத்து இதை அம்மா கையிலே மட்டும் கொடுக்கும்படி தன் ஆசிரியர் கூறியதாக சொன்னான்.

அக் கடிதத்தை அமைதியாக வாசித்த தாய், கண்ணீரோடு அதை தன் மகனுக்குப் பின்வருமாறு வாசித்துக் காண்பித்தார். 'உங்கள் மகனின் திறமைக்கும் அறிவிற்கும் எங்கள் பாடசாலை மிகவும் சிறியது. அவனுக்கு கற்றுக் கொடுக்கக்கூடிய ஆசிரியர்கள் எங்களிடம் இல்லை. ஆகவே உங்கள் மகனுக்கு நீங்களே கற்றுக் கொடுப்பது நல்லது. தோமஸ் எடிசன் அமைதியானான். அவனால் ஆழமாக சிந்திக்க முடியவில்லை.

மகனை உற்றுக் கவனித்துக் கவலையில் ஆழ்ந்த தாய் மகனுக்காகத் தேவனை நோக்கினாள். 'கர்த்தர் மேல் பாரத்தை வைத்துவிட்டு; தன் மகனுக்கான முயற்சிகளை எடுத்தாள்'. தனக்குத் தெரிந்தவற்றை மகனுக்கு கற்றுக் கொடுத்து எவ்வளவிற்கு புத்தகங்களை வாங்கிக் கொடுக்க முடியுமோ அவ்வளவிற்கு புத்தகங்களை வாங்கிக் கொடுத்துப் படிக்கச் செய்தாள்.

பல ஆண்டுகளுக்கு பின் தாய் இறந்துவிட்டாள். அந் நூற்றாண்டின் தலைசிறந்த விஞ்ஞானியும் ஆராய்ச்சியாளருமென தோமஸ் எடிசன் புகழடைந்தார். ஒரு நாள் அவர் வீட்டை பெருக்கி சுத்தம் செய்யும் போது தான் பாடசாலையிலிருந்து

தாயினிடம் கொண்டு வந்து கொடுத்த கடிதத்தைக் கண்டெடுத்தார். அதில் பின்வருமாறு எழுதியிருந்தது.

'உங்கள் மகன் மனவளர்ச்சியில் குறைவுபடுவதால் தயவு செய்து எங்கள் பாடசாலைக்கு அவனை அனுப்பாதீர்கள். உங்கள் மகனால் எங்கள் பாடசாலை தரம் இறங்கிவிடும். வீட்டிலேயே அவனுக்கு கற்பிப்பது நலம்'

கடிதத்தை வாசித்த தோமஸ் எடிசன் கண்ணீர் வடித்தார். தன் நாட்குறிப் பேட்டில் பின்வருமாறு எழுதினார்.

'மனவளர்ச்சி குன்றிய தோமஸ் எடிசன் விஞ்ஞானியும் ஆராய்ச்சியாளரு மானது அவரது தாயினாலேயே'

தேவனே நீர் எனக்குத் தந்திருந்த தாய்க்காக உமக்கு நன்றி. தேவனே நீர் என்னைத் தள்ளாமலும் உமது காருண்யம் என்னை உயர்த்தி வைத்ததற்காகவும் உம்மை ஸ்தோத்தரிக்கிறேன். என்று எடிசன் தேவனை மகிமைப்படுத்தினார்.

அன்பான பிள்ளைகளே உங்களில் காணும் குறைபாடுகளினால் மற்றவர்கள் உங்களை ஒதுக்கிவிடுவார்கள். ஆனால் தேவ பக்தியுள்ள ஒரு தாயின் முயற்சி உங்களை உயர்த்தி வைக்கும். 'ஆகவே உங்கள் தாயைக் கனம் பண்ணுங்கள்'.

**லேவியராகமம் 19:3 உங்களில் அவனவன் தன்தன் தாய்க்கு பயந்திருக் கக்கடவீர்கள்.**

## குறுக்கெழுத்துப் போட்டி - 93
### சரியான பதில்கள்

**இடமிருந்து வலமாக**

04. யேசபேல் (11இரா 9:32)
06. அரியேல் (ஏசாயா 29:1)
08. ஓபேத் (11நாளா 28:9)
11. யோபு (யோபு 13:16)
14. தாப்பெனேஸ் (1இரா 11:19)
15. ஆரோன் (எண் 20:28)

**வலமிருந்து இடமாக**


02. கிதியோனிடம் (நியா 6:12)
05. ரெகபியா (1நாளா 23:17)
07. எப்ரோன் (யாத் 6:18)
12. நோவா (ஆதி 9:20)
16. ஆமான் (எஸ்தர் 5:9)

**மேலிருந்து கீழாக**

01. ராமதாயீம் (1சாமு 1:1)
03. அப்னேர் (11சாமு 2:23)
09. கோரேஸ் (எஸ்றா 1:3)

**கீழிருந்து மேலாக**

10. நெகேமியா (நெகேமியா 1:4)
13. பெல்ஷாத்சார் (தானி 5:5)
15. ஆதாத் (1நாளா 1:46)
17. சாப்பாத் (11இரா 3:11)






## ஐசக் ஜோக்ஸ்

## 1607 - 1646



### ஆண்டவரின் அழைப்பிற்கு அடிபணிபவர்களே

ஆண்டவரின் அழைப்பிற்கு அடிபணிபவர்களே இறைத் தொண்டர்கள். இவர்கள் அஞ்சா நெஞ்சம் படைத்தவர்கள். துணிந்து செயற்படும் உறுதி கொண்டவர்கள். உடல் அழிந்தாலும் உள்ளங்களைக் கிறிஸ்துவின் பக்கம் திசை திருப்புவார்கள்.

ஐசக் ஜோக்ஸ் பிரான்ஸ் தேசத்தில் பிறந்தவர். 10 வயதிலேயே இயேசு சபையில் தன்னை இணைத்துக் கொண்டவர். கொழுந்து விட்டு எரியும் சுவிசேஷ தாகத்தை பிஞ்சு பருவத்திலேயே பெற்றிருந்தார். உடலையும், உள்ளத்தையும் உலகத்தின் பக்கம் திருப்பாமல் கிறிஸ்துவை நோக்கித் திரும்பினார்.

இயேசு சபையின் தலைமையிடத்திலிருந்து ஒரு அழைப்பு ஐசக் ஜோக்ஸைத் தேடி வந்தது. வட அமெரிக்காவுக்கு சுவிசேஷத்தை ஏந்திச் செல்ல வேண்டும் என்பதே அந்த அழைப்பு. உடனே தன்னை அர்ப்பணித்தார் ஐசக்.

நெடுநாள் பணத்திற்குப் பின் 8பேர் அடங்கிய மிஷனெரிக் குழு வட அமெரிக்காவை அடைந்தது. 'இராக்வா' என்ற காட்டுமிராண்டிகள் கூட்டம் இவர்களை மிகவும் கோபத்துடன் எதிர்கொண்டது. இடையூறுகளும், ஆபத்துக்களும் ஏராளமாக ஏற்பட்டன. அப்பழங்குடி மக்களிடையே ஏற்படும் கொள்ளை நோய்களுக்கும், அசம்பாவிதங்களுக்கும் இவர்கள் மேல் குற்றம்

சுமத்தப்பட்டது. ஐந்து ஆண்டுகள் கடினமாக பணி செய்தாலும் அக்காட்டு மிராண்டிகளால் அதிகம் சித்தரவதைகளுக்கு உள்ளாயினர்.

ஐசக் ஜோக்ஸ் 'இராக்வா' காட்டுமிராண்டிகளால் பிடிக்கப்பட்டார். தசை தசையாக அவர் உடலை வெட்டினார்கள். கைவிரல்களையும் வெட்டி அவர் கண் முன்பாகவே தின்றனர். திடீரென ஒருவன் கோடாரியால் வெட்ட, அவர் உடல் கீழே விழுந்தது. இரத்தம் பூமியில் சிந்தியது.

ஆயினும் அவர் கொல்லப்பட்ட ஓர் ஆண்டுக்குள் அங்கு 3000 பேர் ஞானஸ்நானம் பெற்றனர். இச் செய்தி அவரின் பணியினை வெளிப்படுத்திக் காட்டுவதாகவும், நம்முடைய விசுவாச வாழ்வை பலப்படுத்துவதாகவும் அமைகின்றது.

**அன்பரே! இரத்த சாட்சிகளின் இரத்தம் திருச்சபையின் வித்து என்பது உண்மையல்லவா?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு: கிறிஸ்துவுக்காகத் தமது இரத்தத்தைச் சிந்தியவரே கிறிஸ்துவின் இரத்தத்தைப் பருகுவதற்கு தகுதியானவராவர்.**

**நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" ஜனவரி 10**

# மேரி மெக்லீன்
# 1855 - 1943

## அறியாமை அகலட்டும்



சென்னையை அடுத்த சோழலிங்கபுரம். 64 புண்ணியத் தீர்த்தங்களும், 25க்கும் மேற்பட்ட வழிபாட்டுத் தலங்களும் உள்ள இடம். ஒரு காலத்தில் வைணவ ஆலய குருமார்களைப் பயிற்றுவித்த சமஸ்கிருத கலாசாலை இங்கு செயல்பட்டது. சமய வைராக்கியமுள்ள "சாதி இந்துக்களின் நகரம்" என்றே இதை அழைக்கலாம்.

இப்பகுதியில் அருட்பணி ஆற்றுவது என்பது எளிதல்ல. அக்காலக் கட்டத்தில் குழந்தைத் திருமணங்கள், சதி போன்றவை வழக்கத்தில் இருந்தன.

சிறு குழந்தைகளுக்குத் திருமணம் செய்தபின் கணவன் இறந்துபோனால் அக் குழந்தைகளுக்கு இழைக்கப்படும் அநீதிகளோ மிக மிகக்கொடூரம்.

குழந்தைகளின் வண்ண உடைகளைக் களைந்து, வெள்ளாடை உடுத்தி, பூவைக் களைந்து, பொட்டை அழித்து, மொட்டையடித்து, தாலியை அறுத்து, வீட்டிற்குள் ஒரு மூலையில் தள்ளிவிடுவார்கள். இவர்கள் வீட்டைவிட்டு வெளியே வருவது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகக் காணப்பட்டது.

மேரி மெக்லீன் இப் பெண்களுக்காகத் தன் வாழ்வை அர்ப்பணித்தார். ஆஸ்திரேலியாவை விட்டு இந்தியா வந்தார். சோழலிங்கபுரத்தை கிறிஸ்துவின் நகரமாக மாற்றத் துணிந்தார். வீட்டில் அடிமைகளாக அடைபட்டுக்கிடந்த பெண்களுக்கு எழுதப் படிக்க கற்றுக் கொடுத்தார். 'ஜனனா மிஷன் பணி' என்ற அமைப்பின் மூலம் பல பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தினார். வேதபாடங்களும், ஜெபங்களும் கற்றுக் கொடுக்கப்பட்டன. இயேசு கிறிஸ்துவை இம் மக்களின் நண்பராக்கினார்.

அன்புள்ளம் கொண்ட அன்னையாக, ஆஸ்திரேலியா பிரிஸ்பேத் தேரியன் சபையின் முதல் அருட்பணியாளராக இந்தியா வந்த மெக்லீன், சிறந்த சேவகியாகவும், விசுவாசிகளுக்கு சிறந்த மாதிரியாகவும் வாழ்ந்தார். அவர்களின் சேவை இன்றும் தொடர்கிறது.

**அன்பரே! அறியாமையால் அடைபட்டுக் கிடக்கும் மக்களை முன்னேற்ற முன்வருவீரா?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு: கர்த்தாவே, இதோ உம் திருப்பணிக்கு என்னை அர்ப்பணிக்கிறேன். என்னை இந்திய நாட்டிற்கு அனுப்பும் — மேரி மெக்லீன்**

**நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" ஜனவரி 11**

## வினாவிடை – 95
## சரியான பதில்கள்

01. சோம்பேறியின் – நீதிமொழிகள் 24:30-31
02. எலிசா – 11இராஜாக்கள் 6:1-7
03. அபிகாயில், சூனேமியாள் – 1சாமு 25:42, 11இராஜா 4:24,
லேவியின் மனைவி – நியாயாதி 19:1-3
04. யூகீத், பஸ்மாத் – ஆதியாகமம் 26:34-35, 27:46
05. தேராகு – ஆதியாகமம் 11:31
06. பார்வோன் – யோசேப்பின் சகோதரரிடம் – ஆதியாகமம் 47:3
07. பின்மாற்ற இஸ்ரவேலர் – மீகா 2:1
08. சகரியா – சகரியா 5:1-3
09. சகரியா – சகரியா 5:2-3
10. சோம்பேறி – நீதிமொழிகள் 26:14

# குறுக்கெழுத்துப் போட்டி 94

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 01 | | | | | | | |
| | | | | | | | | 02 |
| | | | 03 | | | | | |
| 06 | | | 05 | | | | 04 | |
| 08 | | 07 | | | | | | |
| | | | | | 09 | | | |
| | | | | | | 10 | | |
| | | 11 | | | | | | |
| | | | | | | | 12 | 13 |

### இடமிருந்து வலமாக

01. நேபுகாத்நேச்சாருடைய தேவனின் நாமம்
03. தாண் புத்திரரை மலைத்தேசத்திற்கு போகும்படி நெருக்கியவர்கள்
05. ஆமானின் மனைவி
07. எலியாவின் கைகளுக்கு தண்ணீர் வார்த்தவன்
11. ஜனங்களை தேசத்தின் கடையாந்தரங்கள் மட்டும் முட்டித்துரத்துபவன்

### வலமிருந்து இடமாக

02. தேவன் ஆசீர்வதிப்பதை தான் திருப்பக்கூடாது என்று கூறியவர்
09. ஜனங்களை மிஸ்பாவிலே கர்த்தரிடத்தில் வரவழைத்தவன்
10. நகரத்து மதில்களில் 5ஆம் அஸ்திபாரம் இந்தக் கல்லினால் போடப்பட்டிருக்கும்
11. இந்த ஆசாரியன் தாவீதின் நகரத்திலே ராஜாக்களண்டையில் அடக்கம் பண்ணப்பட்டார்
12. நடுக்கத்தோடே தாவீதுக்கு எதிர்கொண்டு போனவன்

### மேலிருந்து கீழாக

01. மொர்தெகாய் இந்த கோத்திரத்தைச் சேர்ந்தவன்
04. பராக்கிரமசாலிகளின் கேடகம் இந்த மலைகளில் அவமதிக்கப்பட்டது
08. மேரிபாலின் அப்பா

### கீழிருந்து மேலாக

06. "அந்நிய தேசத்தில் பரதேசியானேன்" என மகனுக்கு இவ்வாறு பெயரிட்டார்
07. தாவீது 7வருடம் இங்கே அரசாண்டான்
10. செஸ்பாத்சாரை தேசாதிபதியாக நியமித்தவன்
13. "உமது அடியாளுக்கு அபத்தம் சொல்ல வேண்டும்" எனக் கூறியவள்




☐ போதகர் பென்ஜோ பொன்னையா (கனடா)




அப்போஸ்தலர் 3ஆம் அதிகாரத்தில் பார்க்கும் போது; சப்பாணியாக பிறந்த ஒரு மனிதனைக் குறித்து காணப்படுகிறது. அவன் தேவாலயத்தின் வாசலில் இருந்து, அங்கே தனக்கு ஏதாவது கிடைக்கும் என்று எதிர்பார்த்திருந்தான். **இன்றைக்கும் உலகத்தில் ஏதாவது கிடைக்கும் என்று பலர் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.** ஏதாவது தங்களுக்கு நடைபெற்றால் போதும் அல்லது தங்களுக்கு ஏதாவது கிடைத்தால் போதும் என்றே சிலர் இருக்கிறார்கள். சில கணவன்மார் மனைவிமாரைப் பார்த்து சாப்பிடுவதற்கு ஏதாவது இருந்தால் கொடுக்கும்படி கேட்பார்கள். ஏனென்றால் அவர்களிடம் எதிர்பார்ப்பு கிடையாது. இந்த மனிதனும் எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாமல் ஏதாவது தனக்கு கிடைக்கும் என்று

இருந்தான். அவன் சுகத்திற்காக தேவால யத்திற்கு வரவில்லை, மாறாக ஏதாவது கிடைக்கும் என்று காத்திருந்தான்.

**நீ கடந்து செல்கிற பாதையில் எனக்கு ஏதாவது கிடைத்துவிட்டால் சந்தோஷம் என்று சொல்கிற உலகத் தின் நடுவில் உன்னையும் என்னையும் தேவன் அனுப்புகிறார்.** தேவாலயத்திற்கு சென்ற பேதுருவும் யோவானும் அங்கே பிச்சை கேட்டுக் கொண்டிருந்த அந்த மனிதனைப் பார்க்கிறார்கள். **'அவர்கள் அவன் பிரச்சினையை அறிந்து எங்களை உற்றுப்பார்'** என்று சொல்கிறார்கள். அப்போது பேதுரு அந்த பிச்சைக் காரனைப் பார்த்து; 'என்னிடத்தில் எதுவும் இல்லை, என்னிடத்தில் உள்ளதை உனக்கு தருகிறேன்' என்று கூறி **"இயேசு கிறிஸ்துவின் நாமத்தில்எழுந்து நடவென்று"** சொல்லி வலது கையினால் அவனைப் பிடித்து தூக்கிவிட்டான். உடனே அவன் கால்களும், கரடுகளும் பெலன்கொண்டு குதித்தெழுந்து நின்று நடந்தான்.

தேவன் உங்களை வெளியே அனுப்புகிற போது **'உங்களிடத்தில் என்ன இருக்கிறது'** என்பதை அறிந்திருக் கிறீர்களா? நீங்கள் அதை அறிந்திருப்பீர் களானால் அது நமக்கு மட்டுமல்ல நம்மை சார்ந்தவர்களுக்கும் அது ஆசீர் வாதமாக இருக்கும். 'இப்போது நம்மிடத் தில் என்ன இருக்கிறது?' என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். நாம் தேவனுக்காக ஊழியம் செய்கிறவர்களாக, தேவனுக்காக மகிமையான காரியங் களை செய்கிறவர்களாக இருக்கலாம். ஆனால் நான் அடிக்கடி சொல்கிற காரியம் சபையிலே ஒரு போதகர் பிரசங்கம் செய்கிற போது, அதைக் கேட்கிறவர்களாய் இருக்கலாம், அல்லது சபையிலே அனேகர் பிரசங்கிகளாய் கூட இருக்கலாம். ஏன் அவர்களுக்கு அனேக பிரசங்கங்கள் கூட தெரியலாம். **ஆனால் இன்றைக்கு நம்மை தேவையுள்ள உலகம் சந்திக்கும் போது கர்த்தரை நாடி, விரும்பி ஒரு உலகம் நிற்கும் போது; என்னிடத்தில் இருக்கிறதை கொடுக்க முடியுமா?** என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். 'என்னிடத்தில் உள்ளதை கொடுக்க வேண்டும்'. பேதுரு சொல்கி றார்; **என்னிடத்தில் உள்ளது அது இயேசுவின் நாமம். அந்த இயேசுவின் நாமத்தை பயன்படுத்தி நான் ஆசீர் வாதம் பெறுவது மாத்திரமல்ல வாசலில் பிச்சை கேட்கிற நீயும் ஆசீர்வாதம் பெறவேண்டும் என்ற எண்ணமுடைய வராய் இருந்தார்.** அப்போது இயேசு என்ற நாமம் கிரியை செய்ய ஆரம்பிக்கும். பேதுரு சொல்கிறார்: நான் பணம் கொடுத்தால் நீ மீண்டும் இங்கே சப்பாணி யாய் உட்கார்ந்திருப்பாய், உன்னை சப்பாணியாய் உட்காரப்பண்ணுவதற்கு அல்ல, நீ குதித்து, நின்று, நடந்து தேவாலயத்திற்குள்ளே செல்லும்படியாக ஒரு வெற்றியுள்ள வாழ்க்கையைக் கொடுக்க கர்த்தர் எனக்குள் ஒரு மகிமையை வைத்திருக்கிறார். **"ஆண்டவர் எனக்குள்ளே ஏதோ ஒன்றை வைத்திருக் கிறார், அது வல்லமையுள்ளது"** என்று சொல்லுகிறார்.

நாற்பது நாட்கள் இரவும் பகலும் கோலியாத் 80முறை சண்டைபோட வாருங்கள், வாருங்கள் என்று கேட்டிருக்கி றான். 80முறை கோலியாத் சண்டைக்கு அழைத்ததை இஸ்ரவேலர் கேட்டிருக்கி றார்கள். அவ்விடத்திற்கு தாவீது வந்த போது இந்த அழைப்பைக் கேட்டு தன் அண்ணன்மார்களிடம் இதைக் குறித்து

கேட்கிறான். அதற்கு அவர்கள் நீ சின்னப் பையன், வேடிக்கை பார்ப்பதற்காகத்தான் இங்கே வந்தாய், உன்னுடைய வேலை ஆடு மேய்ப்பது, அப்பாவினுடைய காரியங்களை பார்ப்பது என்று அவன் அண்ணன்மார் சொல்கிறார்கள். அப்பொழுது தாவீது அவைகளையெல்லாம் அசட்டை செய்துவிட்டுவிட்டான். அருமையான தேவபிள்ளைகளே தாவீது கோலியாத்தை நிமிர்ந்து பார்க்கிறான், அவனுக்கு தெரிந்தது என்னவென்றால் என் சிறுவயதிலே ஒரு நாள் என் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்து போது சிங்கமும் கரடியும் குறுக்கிட்ட போது அதன் வாய்க்குள் கைகளைவிட்டு அதன் தாடைகளை கிழித்துப் போடுவதற்கு எனக்குள் ஒருவர் இருந்தாரே, அவர் தான் அதைச் செய்தார். உங்களுக்கு ஒரு பிரச்சினை வருகிற போது நீங்கள் காணவேண்டிய ஒரு காரியம் அந்த சூழ்நிலையில் **'உங்கள் தேவனைப் பாருங்கள்'**. 'இஸ்ரவேலின் தேவனை நிந்தித்த இவனுடைய தலையை எடுத்துப்போட வேண்டும்' என்று தாவீது சொல்கிறான். இன்றைக்கு எம்மிடம் என்ன இருக்கிறது? என்பதை ஆராய்ந்து பார்க்க தேவன் எம்மை அழைக்கிறார்.

உலகத்தில் பலர் கர்த்தருக்கென்று தங்களை அர்ப்பணிக்காமல் கர்த்தருடைய நாமத்தைப் பயன்படுத்துகிறார்கள். **அப்போஸ்தலர் 3:7 வலதுகையினால் அவனைப் பிடித்துத்தூக்கிவிட்டான்; உடனே அவனுடைய கால்களும் கரடுகளும் பெலன்கொண்டது**. கர்த்தரால் நாட்டப்பட்டு, கர்த்தரால் நடத்தப்படுகிறவர்கள் மற்றவர்களை தூக்கிவிடுகிறவர்களாய் இருக்கிறார்கள். உன் விசுவாசத்தை விழுத்துகிறவர்கள் அல்ல, ஏதோ ஒன்றைக் கூறி உன்னை மயக்குகிறவர்களும் அல்ல, மாறாக உன் வலது கரத்தைப் பிடித்து தூக்கிவிடுகிறவர்கள் தான் தேவனால் நடத்தப்படுகிறவர்கள். உங்களுடைய பிரச்சினையாக இருக்கட்டும் அல்லது மற்றவர்களுடைய பிரச்சினையாக இருக்கட்டும். நீங்கள் தேவனுக்குள் தரித்திருக்கிறவர்கள் என்றால், கர்த்தர் உங்களுக்குள் வாசமாயிருப்பார் என்றால் அவர் உங்களுடைய வாழ்வில் வெற்றியைத் தருவது மாத்திரமல்ல நீங்கள் எந்த காரியத்தை கரங்களை பிடித்து தூக்கிவிடுகிறீர்களோ அதை தேவன் பெலன் கொள்ளச் செய்வார்.

**அப்போஸ்தலர் 3:8 அவன் குதித்தெழுந்து நின்று நடந்தான்; நடந்து, குதித்து, தேவனைத் துதித்துக்கொண்டு, அவர்களுடனேகூடத் தேவாலயத்திற்குள் பிரவேசித்தான்**. சப்பாணியாய் பிறந்த இவனைக் காலையில் தேவாலய வாசலில் கொண்டு வந்து வைத்துவிட்டு செல்வார்கள். அவர்களுக்கு நேரம் இருந்தால் தான் திரும்ப வீட்டிற்கு இவனைக் கொண்டு செல்ல வருவார்கள். ஏனென்றால் மற்றவர்கள் தயவிலே அவன் வாழ்ந்தவன். இந்த உலகம் ஏதோ ஒரு தயவில், நம்பிக்கையில் வாழ்ந்து கொண்டிருக்கிறது. அதை தூக்கி நிறுத்துவது உன்னுடைய வேலை. அவர்களின் கரங்களைப் பிடித்து எழுந்து நிமிர்ந்து நிற்கப்பண்ணுவது தேவபிள்ளைகளாகிய எங்களுடைய கடமை. பிச்சைக்காரன் எழுந்து நின்றான். அவனால் நிற்க முடிந்தது. உலகத்தை நிற்கப்பண்ணக்கூடிய தேவபிள்ளை நீ என்பதை மறந்து போகாதே. எனக்குப் பிரச்சினை, பிரச்சினை என் பிரச்சினை சரியாகட்டும் என்று சொல்லாதே. தேவனுடைய வல்லமை உனக்குள்

இருக்குமாயிருந்தால் தேவன் உன்னை ஆசீர்வாதமாக மாற்றுவார், உன்னை வல்லமையாக மாற்றுவார். மகிழ்ச்சியைக் கொடுக்கிற மனிதனாக பேதுருவை தேவன் மாற்றினார்.

*எனது சகோதரி தூர இடத்தில் திருமணமாகி இருந்ததால் யாரும் அடிக்கடி அவரிடத்தில் செல்வதில்லை. குறிப்பிட்ட நாட்களின் பின் அந்த சகோதரிக்கு மகன் ஒருவன் பிறந்தான். நான் ரொறன்ரோ பட்டணத்தில் இருந்து அவனைப் பார்ப்பதற்காக செல்வேன். அப்போது அவனுக்கு இரண்டு வயதிருக்கும். நான் செல்கிற போது நினைத்தேன் அவன் என்னுடைய முகத்தைப் பார்த்துவிட்டால் ஓடிவந்து என்னைக் கட்டியணைத்து முத்தம் செய்வான் என்று. ஆனால் அவன் அப்படிச் செய்யவில்லை. மாறாக அவன் வீட்டின் விறாந்தையில் மாறி மாறி 20 தடவைகளுக்கு மேல் ஓடுகிறான். நான் மாமா வந்திருக்கிறேன் என்று கூறினாலும் அவன் பார்க்க வில்லை. மாமா மாமா என்று அங்கும் இங்குமாக ஓடுகிறான்.* நான் இந்த வேதப்பகுதியை படிக்கிற போது அவனைத் தான் யோசித்தேன். அவன் எதை எதிர்பார்த்தானோ அது அவனுக்கு கிடைத்தது. ஆனால் அதை சொல்லத்தெரியவில்லை. அது அவனது மனதின் வாஞ்சையாக இருந்தது.

நீங்கள் விசுவாசத்தில் வளர்ந்திருக்கலாம், ஆவியில் நிறைந்திருக்கலாம். ஆனால் ஒன்றை எதிர்பாருங்கள் உங்களை கர்த்தர் ஒரு இடத்தில் வைப்பாராக இருந்தால் உங்களை தேவன் ஏன் அந்த இடத்திலே வைத்திருக்கிறார் என்பதை தேவனிடம் கேட்டு தெரிந்து கொள்ளுங்கள். அது குடும்பமாக இருக்கட்டும் தெரியாமல் இந்த குடும்பத்தில் வந்துவிட்டேன் என்று சொல்லாதீர்கள். சபையில் இருந்தீர்கள் என்றால் நான் பிழையான சபையில் இருக்கிறேன் என்று சொல்லாதீர்கள். காரணம் தேவன் தன்னுடைய கிரியைகளை நடப்பிக்கிறவர். அவர் செய்ய நினைக்கும் காரியம் வாய்க்காமல் போகாது. சங்கீதக்காரன் சொல்கிறான், வாய்க்கால் ஓரமாய் நடப்பட்ட மரம் அதினதின் காலத்தில் தன் கனியை கொடுக்க தேவன் கிருபை செய்வார். அவன் செய்வதெல்லாம் வாய்க்கும். **நம்மை தேவன் ஏன் இந்த இடத்தில் வைத்திருக்கிறார் என்பதை அறிவீர்கள். தேவன் இந்த இடத்தின் மூலம் உங்களுக்குள் கிரியை செய்ய ஆரம்பிப்பார்.** பேதுருவை யோசித்துப் பாருங்கள்; ஒரு காலத்தில் ஒரு பெண்ணுக்குப் பயந்திருந்தான், நீயும் அவர்களுடன் இருந்தவன் என்று கூறிய போது இல்லை என்று மறுதலித்தான். பிற்பாடு உன் பேச்சு காட்டிக்கொடுக்கிறது என்று சொன்ன போதும் அடித்து சத்தியமாய் நான் இல்லை என்று சொன்னான். வேதம் சொல்கிறது சத்தியம பண்ணக்கூடாது என்று. ஆனால் தன்னை நிரூபிப்பதற்காய் சத்தியம் பண்ணுகிறான். அதே பேதுரு பிற்பாடு ஒரு சூழ்நிலை வந்த போது பிச்சைக்காரனைப் பார்த்த போது என்னிடத்தில் உள்ள இயேசு இவனுக்கும் வேண்டும் என்று தெரிந்து கொண்டான். **ஆகவே நாம் தெரிந்து கொள்ள வேண்டிய காரியம் இயேசு கிறிஸ்துவை எங்களுக்குள் வைத்துக் கொள்ள வேண்டும்.**

அப்போஸ்தலர் 27ஆம் அதிகாரத்தில் பவுல் என்று சொல்லப்படுகிற மனிதனை பார்க்கிறோம். அந்த மனிதன் சிறைபிடிக்கப்பட்டான். **அப்போஸ்தலர் 27:25 ஆனபடியினால் மனுஷரே. திடமனதாயிருங்கள். எனக்குச் சொல்லப்பட்ட பிரகாரமாகவே நடக்கும் என்று தேவனிடத்தில் நம்பிக்கையாயிருக்கிறேன்.** பவுல் பிரச்சினையில் இருந்து பேசுகிறார். கப்பல் உடைந்து போனால் பவுலும் மரித்துப் போகிற நிலையில் இருக்கிறார். ஆனாலும் 'அப்படிப்பட்ட பயங்கரமான சூழ்நிலையிலே அவன் தேவனை நம்பினான்'. அவனுக்குள் தேவன் வாசம் பண்ணுகிறார். அந்த தேவன் அவனைக் கைவிடமால் பாதுகாத்துக் கொள்ள ஆயத்தமாக இருக்கிறார். **அப்போஸ்தலர் 27:22-24 (22.) ஆகிலும், திடமனதாயிருங்களென்று இப்பொழுது உங்களுக்குத் தைரியஞ்சொல்லுகிறேன். கப்பற்சேதமேயல்லாமல் உங்களில் ஒருவனுக்கும் பிராணச்சேதம் வராது. 23. ஏனென்றால், என்னை ஆட்கொண்ட வரும் நான் சேவிக்கிறவருமான தேவனுடைய தூதனானவன் இந்த இராத்திரியிலே என்னிடத்தில் வந்துநின்று: 24. பவுலே, பயப்படாதே, நீ இராயனுக்கு முன்பாக நிற்கவேண்டும். இதோ, உன்னுடனேகூட யாத்திரைபண்ணுகிற யாவரையும்தேவன் உனக்குத் தயவுபண்ணினார் என்றான்.** இயேசு வல்லமையுள்ளவர் என்று சொல்லிக்கொண்டு இருக்கத் தேவையில்லை இயேசு உங்களுடன் உண்மையாக இருந்தால் உங்களுடைய உபத்திரவத்தின் மத்தியில் உங்களோடு பேசுவார். நீங்கள் கைவிடப்படுகிற சூழ்நிலை வருகிற போது உங்களோடு பேசுவார். உலகம் உன்னை வேதனைப்படுத்தும் போது உனக்காக கடந்து வருவார்.

அங்கே இருக்கிற போர்ச்சேவகர், ரோம அதிகாரிகள் பவுலை அவனுடைய நண்பர்களிடத்தில் அழைத்துச் செல்லவில்லை, அல்லது அவனுக்கு நன்மை செய்யும்படிக்கும் அழைத்துச் செல்லவில்லை. மாறாக அவனை நியாயம் தீர்க்கக் கொண்டு செல்கிறார்கள். அவனைக் குற்றவாளியாக மாற்றப் போகிறார்கள். **அந்த குற்றவாளியாக மாற்றக்கூடியவர்கள் நடுவே கர்த்தர் பவுலை நிறுத்துகிறார். ஆனால் அந்த இடத்திலும் கர்த்தர் பவுலோடு பேசுகிறார்.** எல்லா நிலைகளிலும், சூழ்நிலைகளிலும் நான் நொந்து போயிருக்கிறேன், பல விதங்களில் கைவிடப்பட்டிருக்கிறேன், ஏமாற்றப்பட்டிருக்கிறேன் ஆனாலும் தேவரீர் என்னோடு இருக்கிறீர் என்று நன்றி சொல்லுங்கள். **அப்போஸ்தலர் 27:23** இந்த ராத்திரியிலே என்றால் **'பயங்கரமான ராத்திரியிலே கர்த்தர் உங்களோடு பேசுவார்'.** நீ கைவிடப்பட்டு, பிரச்சினையாக இருந்த ராத்திரி இருக்கிறது அல்லவா? அடுத்தது நீ என்ன செய்வது என்று தெரியாமல் தயங்குகிற ராத்திரிகள் இருக்கிறது அல்லவா? அந்த இரவுகளிலே தேவன் பேசுவார். "பவுலே பயப்படாதே" என்றால் அவர் உங்களை அறிந்திருக்கிறார். 276 பேர் அந்த கப்பலில் இருக்கிறார்கள். ஆனால் கர்த்தர் "பவுலே பயப்படாதே" என்று பேசுகிறார். **கர்த்தர் நமக்குத் தேவையானதைத் தான் பேசுவார். அவர் நமக்கு தேவையற்ற காரியங்களை பேசமாட்டார்.**

*என்னுடைய கைத்தொலைபேசியில் சிறிய பழுது ஏற்பட்ட*

பொழுது அதனை சீர் செய்வதற்காக அந்த நிறுவனத்தின் அலுவலகத்திற்கு சென்றிருந்தேன். அங்கே என்னுடைய பிரச்சினையை கூறிய போது என்னுடைய தகவல்களைப் பெற்றுக் கொண்டு பற்றுச் சீட்டைக் கொடுத்து உங்கள் இலக்கத்தை அழைக்கும் போது அலுவலருடன் பேசுங்கள் என்றார்கள். அப்பொழுது என்னுடைய பிரச்சினையை தீர்க்கப்போகிறார்கள் என்று நினைத்தேன். அவ்வாறே அவர்கள் என்னை அழைத்தார்கள் ஆனால் என்னுடைய பிரச்சினையைக் குறித்து பேசாது தங்களது உற்பத்திகள், தங்களது சேவைகள் தொடர்பாக விளக்கம் கொடுக்க ஆரம்பித்தார்கள். அப்பொழுது நான் சொன்னேன், இவையெல்லாம் எனக்குத் தேவையில்லை, எனக்குத் தேவையானது என்னுடைய தொலைபேசியில் உள்ள பழுதை சீர் செய்து தர வேண்டும் என்று. எங்களுக்கு தேவையானது ஒன்றாக இருக்கும் ஆனால் அதற்கு உலகம் தேவையற்றதை சொல்லும். உலகம் நாம் நினைத்திராததை சொல்லும் அல்லது தான் நினைக்கிறதை எங்களுக்குள் போடுவதற்கு ஆரம்பிக்கும். **ஆனால் நாம் ஆராதிக்கும் தேவனோ நமக்கு தேவையானதை பேசுவார். உனக்கு என்ன தேவையாக இருக்கிறதோ அதையே கர்த்தர் பேசுவார், செய்ய ஆரம்பிப்பார்.**

இயேசு கிறிஸ்து மரித்த பிற்பாடு அவருடைய உடலை கல்லறையில் அடக்கம் செய்திருந்தார்கள். நான் மரித்தாலும் உம்மை பின்தொடர்வேன் என்று கூறியவர்கள் எல்லோரும் நன்றாக நித்திரை செய்து கொண்டிருந்தார்கள். **ஆனால் மரியாள் என்ற பெண் மாத்திரம் ஆண்டவரின் சரீரத்தைப் பார்க்க வேண்டும் என்று கல்லறையினிடத்திற்கு வருகிறாள்.** அவள் கண்ணீரோடு இயேசுவின் சரீரத்தை பார்த்து அதைக் காணாது ஏக்கத்தோடு திரும்பிப்பார்க்கிறாள். அங்கே இயேசு கிறிஸ்து நிற்கிறார். ஆனால் நமக்குத் தான் அவசரம். இயேசு யார்? அவருடைய பிரசன்னம் என்னவென்று தெரியாது அவள் திரும்பிப் பார்த்து அவரைத் தோட்டக்காரன் என்று எண்ணி, நீர் அவரை எடுத்துக் கொண்டு போயிருந்தால் வைத்த இடத்தை சொல்லும் நான் அவரை எடுத்துக் கொள்கிறேன் என்று அவர் மேல் குற்றம் சுமத்துகிறாள். **உடனே அவர் மரியாளே! என்றார்; அதற்கு அவள் ரபூனி! என்றாள்.** இது தான் நாம் தேவனோடு வைத்திருக்கிற தொடர்பு - உறவு. **நீ கலங்கி நிற்கிற வேளையில் உன் கர்த்தர் உன் அருகில் நிற்பார். நீ வேதனையோடு நிற்கிற போது கர்த்தர் உன்னை தேடிவருவார்.** இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த காரியம் எல்லோருக்கும் தெரியும்; ஆனால் இரண்டு சீஷருக்கு மட்டும் அது தெரியாது. அவர்கள் இயேசு மரித்துவிட்டார் என்று இப்போதும் பேசிக்கொண்டு துக்கமுகமாய் எம்மாவூர் வீதியிலே நடந்து செல்கிறார்கள். ஆனால் அவர்களோடும் இயேசு சேர்ந்து நடந்து சென்றார் என்று வாசிக்கிறோம். இவர் தான் அந்த ஆண்டவர். **சீயோன் தேவாலய ஊழியங்கள் 60ஆண்டை பூர்த்தி செய்கிற**

இந்தக் காலகட்டத்தில் சபையிலே பெரிதான மாற்றங்கள் நடைபெற்றிருக்கக்கூடும். எத்தனையோ காரியங்கள் சபையிலே சொல்லப்பட்டிருக்கும் ஆனால் ஒன்றை நம்புங்கள் இயேசு நம்மோடு சேர்ந்து நடந்து வந்திருக்கிறார். ஆண்டவர் அவர்கள் துக்கத்தை மாற்றுகிறார்.

**அப்போஸ்தலர் 27:25 ஆனபடியினால் மனுஷரே, திடமனதாயிருங்கள். எனக்குச் சொல்லப்பட்ட பிரகாரமாகவே நடக்கும் என்று தேவனிடத்தில் நம்பிக்கையாயிருக்கிறேன்.** எனக்கு தனிப்பட்ட பிரகாரமாக வாக்குத்தத்தம் வந்தது உண்மை ஆனால் அந்த வாக்குத்தத்தம் நிறைவேற வேண்டும் என்றால் அது நடக்கும் என்று தேவனிடத்தில் நம்பிக்கையாக இருக்க வேண்டும். அது வெறும் நம்பிக்கை அல்ல அதை நடத்துகிறவரும் தேவன் என்று நம்பிக்கையாக இருக்கவேண்டும். 14நாட்கள் கப்பலில் இருந்த எவரும் சாப்பிடவேயில்லை. ஆனால் அப்போது பவுல் சாப்பிடுவதற்கு வாருங்கள் என்று மற்றவர்களை அழைத்து அப்பத்தை எடுத்தான். அவ்வாறெனில் கப்பலுக்குள் அப்பம் இருந்திருக்கிறது. சாப்பிடக்கூடிய வசதி இருந்தது ஆனால் சாப்பிடுவதற்கு மனது இருக்கவில்லை. இன்றைக்கு உங்களுக்கும் அப்படிப்பட்ட மனநிலை இருக்கிறதா? எல்லாம் கிடைத்திருக்கிறது, நல்ல குடும்பம் கிடைத்திருக்கிறது, நல்ல கணவன், நல்ல மனைவி, நல்ல வேலை, வாழ்க்கை கிடைத்திருக்கும். ஆனால் ஆண்டவரே அதை அனுபவிக்கக்கூடிய நிலை இல்லையே என்றால் கர்த்தர் அந்த இராத்திரியிலே உங்களோடு பேசுவார்.

சிறிய வயதில் நான் செய்கிற பெரிதான வேலை என்னவென்றால், அம்மாவை பயமுறுத்துவதற்காக சிலவேளை சாப்பிடாமல் இருப்பேன். ஆனால் அம்மாவோ என்னை கெஞ்சி சாப்பாடு கொடுப்பார்கள். பிற்பாடு 13, 14 வயது வந்த போது சிலவேளை நான் பிழை செய்தால் அம்மா சொல்வார், இன்றைக்கு உனக்கு சாப்பாடு இல்லை என்று. அப்போது நான் எதுவும் பேசமுடியாது, பட்டினி தான் இருக்க வேண்டும். ஆனால் இங்கு இவர்கள் வேதனை நிமித்தம் பட்டினியாக இருந்தார்கள். **அப்போஸ்தலர் 27:34-37 (34.) ஆகையால் போஜனம்பண்ணும்படி உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன், நீங்கள் தப்பிப் பிழைப்பதற்கு அது உதவியாயிருக்கும்; உங்கள் தலையிலிருந்து ஒரு மயிரும் விழாது என்றான். 35. இப்படிச் சொல்லி, அப்பத்தை எடுத்து, எல்லாருக்குமுன்பாகவும் தேவனை ஸ்தோத்திரித்து, அதைப் பிட்டுப் புசிக்கத்தொடங்கினான். 36. அப்பொழுது எல்லாரும் திடமனப்பட்டுப் புசித்தார்கள். 37. கப்பலில் இருநூற்றெழுபத்தாறு பேர் இருந்தோம்.** அவ்வளவு பேரையும் தைரிய வார்த்தையால் பவுல் தூக்கி நிறுத்துகிறான். தேவன் பேதுருவைக் கொண்டு மற்றவர்கள்ள தூக்கி நிறுத்தினார். அதே போன்று தேவன் நம்மை வைத்திருப்பது மற்றவர்களை தைரியப்படுத்தி தூக்கி நிறுத்துவதற்கு. அப்படி நாம் மற்றவர்களை பலப்படுத்த வேண்டுமென்றால் நாம் கர்த்தருக்குள் பலப்பட வேண்டும், கர்த்தருக்குள் தைரியமாக இருக்க வேண்டும். ஒரு நாள் கர்த்தர் பேதுருவைப் பார்த்து சொன்னார்;

'நீ இப்போது ஸ்திரப்படு, ஸ்திரப்பட்ட பின்பு மற்றவர்களை ஸ்திரப்படுத்து' என்றார்.

*சிலர் சபைகளில் குறிப்பிட்ட காலம் இருந்து வளர்ந்துவிட்டால் போதும், அல்லது சபையை நடாத்தும் காரியங்களைப் பார்த்து விட்டால் போதும் புதிய ஊழியம் என்று கிளம்பிவிடுவார்கள். கடந்த நாட்களில் நான் ஒரு வகுப்பிலே பேசியபோது சொன்னேன் இன்று சுவிசேஷம் அறிவிக்க வேண்டும் என்பதற்காகவே போதகர்களாக மாறினவர்கள் ஏராளமானோர் உண்டு. ஆனால் சுவிசேஷம் அறிவிப்பதற்கு போதகராக மாறவேண்டிய அவசியம் இல்லை. ஏனென்றால் சுவிசேஷம் அறிவிப்பது ஒவ்வொரு தேவபிள்ளைகளினதும் வேலை.* **போதகர்களாக மாறவேண்டும் என்றால் நாம் தேவனால் பிரத்தியேகமாக அழைக்கப்பட வேண்டும்.** கப்பலில் பவுலை கர்த்தர் ஏனோ தானோவென்று எழும்பி பேசப்பண்ணவில்லை. நீங்கள் திடப்பட்ட பின்பு மற்றவர்களுக்கு சுவிசேஷம் சொல்லுங்கள். நீங்கள் சுவிசேஷம் சொல்லும் போது சிலவேளை யாராவது இயேசுவை எப்படித் தெரியும் என்று கேட்பார்கள். நீங்கள் சொல்லுங்கள் அவர் இன்னென்ன காரியங்களை என் வாழ்வில் செய்தார் என்று. அவர் நல்லவர், சிலுவையில் எனக்காக மரித்தார் என்று சொல்லுங்கள். அப்பொழுது மற்றவர்கள் திடப்பட ஆரம்பிப்பார்கள். ஒன்று திடப்பட மற்றது திடப்படுத்த வேண்டும். அப்படி நடக்க வேண்டும் என்றால் கர்த்தர் எங்களை ஆசீர்வதிக்க வேண்டும். **கர்த்தர் என்னை நடத்தாவிட்டால் நான் கர்த்தருக்குள் வாழ முடியாது.**

உலகத்தில் பார்த்தால் மற்றவர்களுக்கு புத்தி சொல்பவர்கள் தான் அதிகம். *ஒருவர் வந்து சொன்னார் போதகர்வேலை என்பது சுகமான வேலை என்று. நான் ஏன் என்று கேட்டபோது சொன்னார்: புத்தி சொல்வது என்பது சுலபமான வேலை என்று. ஒரு நாள் ஒரு கணவன் வேலை முடிந்து வீட்டிற்கு வந்தார். அவர்களது சாப்பாட்டு மேசையில் சாப்பாடு வைக்கப் பட்டிருந்தது. அவர் சாப்பாட்டை எடுத்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார். ரசம் சாப்பிடும் போது அவர் மனைவியை அழைத்து உனக்கு எத்தனை தடவை சொன்னேன் உணவு தயார் செய்யும் போது தொலைபேசியைப் பார்த்துக் கொண்டிருக்காதே என்று. இன்று நீ சமைக்கும் போது தொலைபேசியைப் பார்த்துக் கொண்டிருந்ததால் ரசத்திற்கு உப்பு போடவில்லை என்றார். அதற்கு மனைவி சொன்னாள்: எத்தனை தடவை சொன்னேன் சாப்பிடும் போது நீங்கள் தொலைபேசியைப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டாம் என்று. நீங்கள் இப்போது ரசம் என்று சாப்பாட்டிற்குள் விட்டது கை கழுவிய தண்ணீர். நீங்கள் உண்மையாக ரசத்தை விடவில்லை.* இது தான் உலகம். இவன் பிழை, அவன் பிழை என்று மற்றவர்களைக் குறித்து சொல்லிக் கொண்டிருப்பார்கள்.

சிலர் திருச்சபையை எடுத்த எடுப்பிலேயே இந்த சபை சரியில்லை, ஊழியம் சரியில்லை, இந்த போதகர் சரியில்லை, இதை இப்படி நடத்தியிருக்கக்கூடாது, ஏதோ சரியில்லை என்று சொல்வார்கள். வேதம் சொல்கிறது முதலாவது நான் திடப்பட வேண்டும். இந்த பவுல் ஒரு நாள் சவுலாய் இருந்த போது தேவன் விசேஷித்த தரிசனத்தைக் கொடுத்தார். ஒளி வந்து பிரகாசித்த போது அவன்தரையிலே வந்து விழுந்தான். ஆண்டவரே நான் என்ன செய்ய சித்தமாக இருக்கிறீர்? என்று கேட்டான். சவுல் பவுலாய் மாறிய உடனே ஊழியக்காரனாய் மாறி பிரசங்கம் செய்யவில்லை. அவன் கண்கள் இருளாக்கப்பட்டு இன்னும் சிலர் அவனைத் தாங்க வேண்டிய நிலை வந்தது. அது தான் தேவன் நடத்துகிற நடத்துதல். அவனை தமஸ்குவிற்கு கொண்டு சென்றார்கள். தமஸ்கு என்றால் **'தேவனுடைய சபை' 'நீ போதிக்கப்படுகிற இடம்'**. நீ குருடாக்கப்பட்டாய் என்றால் தேவன் உன்னை சந்தித்தார் என்பது உண்மை, கர்த்தர் உன்னைப் பிடித்தார் என்பது உண்மை. பிடிக்கப்பட்டவன் கிறிஸ்துவால் முழுவதும் ஆட்கொள்ளப்பட வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். தமஸ்கு என்ற சபையிலே அனனியா என்ற போதகர் இருந்தார். கர்த்தருடைய பிள்ளைகள் தேவ சபையிலே இருக்கிற போது எவ்வளவு காலம் பொறுத்திருப்பது! நான் எப்போது பொங்கி எழுவது? எப்போது நான் கர்த்தருக்கென்று பெரிய காரியங்களைச் செய்வது? என்று யோசித்தால் நீ குருடாக்கப்பட்ட காலத்தை நினைத்துக் கொள். கர்த்தர் ஏன் சவுலைக் குருடாக்கினார் என்றால் இதுவரை அவன் பார்வை அவனுடையதாக இருந்தது, கிறிஸ்தவர்களை துன்புறுத்துகிற பார்வையாக இருந்தது. யூத கலாச்சாரத்திற்கு எதிராக இயேசு என்ற ஒருவர் இருக்கிறார், அவரை இல்லாமல் செய்ய வேண்டும் என்பதாக இருந்தது ஆனால் கர்த்தர் அதை உடைத்தார். அதற்கு பின்பதாக நீங்கள் அந்த சம்பவத்தைப் பார்த்தால் பவுல் சில காலம் சீஷரோடு தங்கியிருந்தான். அங்கே அவன் கற்பிக்கப்படுகின்றான். அது தான் தேவனுடைய பிள்ளைக்கு தேவன் உண்டாக்குகிற இடம். அவன் நன்றாக கற்று தேறிய பிற்பாடு சீக்கிரமாய் இயேசுவே கிறிஸ்து என்று பிரசங்கிக்கத் தொடங்கினான். எம்மை பெலப்படுத்த வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்.

ஆகவே பிரியமானவர்களே இந்த நாட்களில் நாம் கிறிஸ்துவில் பெலப்பட்டு மற்றவர்களை தூக்கி நிறுத்துகிறவர்களாக மாறவேண்டும் என்று தேவன் விரும்புகிறார். அதைப் புரிந்து கொண்டு அவருக்காக வாழுங்கள்.


**"தேவன் தாமே**
**உங்களை நிறைவாக**
**ஆசீர்வதிப்பாராக"**

**"தேவன் அழைக்காமல் நீ போதகரானால் சபைக்கு, தேவனுடைய ராச்சியத்திற்கு இழப்பை கொண்டு வரும்"**




## வேதப்பகுதி: பிலிப்பியர் 4:4—10

ஸவீனா நீ ஏன் இரண்டு நாட்களாக மிகவும் டல்லாகவே இருக்கிறாய்? என்று கேட்டாள் சகானி. 'என் அம்மாவும் அப்பாவும் இரண்டு நாட்களாக என்னிடம் நன்றாக பேசவேயில்லை, அதனால் தான்' என்றாள் ஸவீனா. 'ஏன் அவர்கள் பேசவில்லை, நீ ஏதாவது தப்பு செய்தாயா?' என்று கேட்டாள் சகானி. 'நான் அதிக நேரம் டி.வி யில் கார்ட்டூன் பார்த்துக் கொண்டிருந்தேன். அம்மா அப்பா சொல்லியும் நான் கேட்கவில்லை. அதனால் தான்' என்றாள் ஸவீனா.



'அப்போ... கார்ட்டூன் உனக்கு சந்தோஷம் தரவில்லை. அப்பா அம்மா நன்றாக பேசினால் தான் உனக்கு சந்தோஷம் கிடைக்கிறது. அப்படியானால் கார்ட்டூன் அதிக நேரம் பார்ப்பதை நிறுத்து' என்றாள் சகானி. சகானி சொன்னபடி ஸவீனா செய்தாள். அப்பா அம்மா மிகுந்த மகிழ்ச்சி அடைந்தார்கள். ஸவீனாவுக்கு மறுபடியும் உற்சாகம் வந்தது. தேவனும் அப்படியே. நாம் அவர் விரும்பியபடி செய்தால் அவர் நம்மோடு நன்றாகப் பேசி நம்மை மகிழ்ச்சியாக வைப்பார்.

**சிந்தனைக்கு:–** கர்த்தர் சொல்வது போல நாம் வாழ்ந்தால் நாம் சந்தோஷமாயிருப்போம். அவர் விரும்பாததைச் செய்தால் மனச்சோர்வு வரும்.

நன்றி: "சின்னஞ்சிறு இதயங்களே கேளுங்கள்! — மே 09

# குறுக்கெழுத்துப் போட்டி - 93, வினா விடை - 95

## சரியான விடை எழுதியவர்கள்

**நாவற்குழி**
01. ஆ.றெஜினா
02. எஸ்.லக்சாயினி

**காரைநகர்**
03. அ.எஸ்தர்
04. அ.கிருசாந்தன்
05. அ.கம்சிகா
06. அ.தெபோரா
07. நா.கிருஷன்
08. நா.கிறிஸ்ரீன்
09. நா.அன்னாள்
10. நா.கிறிஸ்தீனா

**வேரவில்**
11. அ.அபிசாயினி +

**கிளிநொச்சி**
12. செ.மேரிகிறேஸ் *

**வடகாடு**
13. ச.எப்சிபா *

**யாழ்ப்பாணம்**
14. எஸ்.டேவிட் சகாயநாதன்

**கனடா**
15. குகன் குடும்பம்

**பாண்டவெட்டை**
16. அ.துவாரகன்
17. மு.ஜெசிந்தா
18. சி.சிவனேஸ்வரன்
19. சி.சுமித்திரா
20. ம.நிம்சிகா
21. ம.சிவகௌரி

* வினாவிடை மட்டும் சரியாய் எழுதியோர்
\+ குறுக்கெழுத்துப்போட்டி மட்டும் சரியாய் எழுதியோர்
இரண்டும் சரியாய் எழுதியோர்

# வினா விடை - 96

01. 'கர்த்தருடைய வழிகளைக் கைக்கொண்டு வந்தேன்' என்றது யார்?

02. 'பயப்படாதே உன் வேண்டுதல் கேட்கப்பட்டது' யார்? யாரிடம் சொன்னது?

03. 'என் பாதைகளை தாறுமாறாக்கினார்' என வாசிப்பதெங்கே?

04. 'போஜனம்பண்ணி மலையிலே இராத்தங்கினவர்கள்' யார்?

05. 'நீங்கள் பயப்படாமலும் கலங்காலமலும் பலத்துத் திடமனதாயிருங்கள்' என்றது யார்?

06. 'தேசத்தின் எல்லா ஜனங்களே நீங்கள் திடன் கொள்ளுங்கள்' என்று சொன்னது யார்?

07. 'இதோ என் விருந்தை ஆயத்தம்பண்ணினேன்' என்று சொன்னது யார்?

08. 'திடமனதாயிருங்களென்று இப்பொழுது உங்களுக்குத் தைரியஞ் சொல்லுகிறேன்' என்று சொன்னது யார்?

09. 'பாதைகள் பாழாயின' என வாசிப்பதெங்கே?

10. 'உமது பாதைகள் நெய்யாய் பொழிகிறது' என வாசிப்பதெங்கே?

அனல்

## சந்தா விபரம்

இச் சஞ்சிகையைத் தொடர்ந்து பெற விரும்புகிறவர்கள் உங்களது பெயரையும், முகவரியையும் தெளிவாக குறிப்பிட்டு சந்தாப்பணத்துடன் ஆசிரியருக்கு அனுப்பி வைத்தால் சந்தாதாரர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுவீர்கள்.

(காசோலை, காசுக்கட்டளை அனைத்தும் "சீயோன் தேவாலயம்" / **ZION CHURCH** என எழுதப்பட வேண்டும்)

## சந்தா விபரம் (தபால் செலவு உட்பட)

Subscription (Per Year ரூ.)

| | |
|---|---|
| இலங்கை (Sri Lanka) | 245.00 |
| இந்தியா (India) | 490.00 |
| கனடா, அமெரிக்கா (Canada & USA) | 1015.00 |
| சிங்கப்பூர், மலேசியா (Singapore & Malaysia) | 525.00 |
| மத்திய கிழக்கு நாடுகள் (Middle East Countries) | 510.00 |
| ஜேர்மனி, இங்கிலாந்து, இத்தாலி, அவுஸ்ரேலியா (Germany, England, Italy & Australia) | 850.00 |

## சந்தா மாதிரிக் கூப்பன்

*சந்தாதாரராக விரும்பின் பின்வரும் மாதிரிக் கூப்பனை தயார் செய்து சந்தாப்பணத்துடன் சேர்த்து அனுப்பி வைக்கவும்.*

பெயர்:..................................................................

முகவரி:................................................................

........................................................................

........................................................................

அன்பின் அனல் வாசகர்களே!
இதுவரை காலமும் இயங்கி வந்த எமது காரியாலயம் தற்போது புதிய நிரந்தர முகவரிக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

சீயோன் தேவாலய காரியாலயம்,
இல 29, 29/1, இராமையாச் செட்டியார் ஒழுங்கை,
யாழ்ப்பாணம், இலங்கை.

Zion Church Office,
No: 29, 29/1 Ramiah Chettiar Lane,
Jaffna, Sri Lanka.

To:

Zion Church Office,
No: 29, 29/1 Ramiah Chettiar Lane,
Jaffna, Sri Lanka.

அச்சமைப்பு: வைத்தி பதிப்பகம் - தொ.பே: 0772002351